பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர் 19 சித்திரை 3 ரபி ஆகிர் 25 இதழ் 63
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 15-4-77

# கொழும்பில் இ. போ. ச. ஊழியர்கள் வேலைநிறுத்தம்

## மகரகம, ஹோமகமவில் பஸ்சேவைகள் ஸ்தம்பிதம்

கொழும்பு, வியாழன்
புதுவருடதினமான நேற்று முதல் மகரகம, ஹோமகம இ. போ. ச. ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

நேற்றைய தினம் பகல் சேவையில் ஈடுபட்டிருந்த பஸ்ஸின் சாரதி ஒருவரை பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தாக்கியதை அடுத்தே இந்த டிப்போக்களைச் சேர்ந்த ஊழியர்கள் உடன்வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனராம்.

நேற்றும் இன்றும் இந்த டிப்போக்களின் பஸ்சேவைகள் முற்றாக ஸ்தம்பித்தன.

இவ் வேலைநிறுத்தத்துக்கு சுமுக முடிவு ஒன்றைக்காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு இ. போ. ச. தலைவர் திரு. ஐ. சி. ரி. கொத்தலாவல பொலிஸ் மா அதிபர் திரு. ஸ்டான்லிசேனநாயக்காவுடன் பேச்சு நடத்தினார்.

பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவுடனும் இ. போ. ச. தலைவர் திரு. கொத்தலாவல இவ்வேலைநிறுத்தம் சம்பந்தமாக தொடர்புகொண்டுள்ளார். (ம-இ)

# பனங்கட்டி விற்பனை வடக்கில் வீழ்ச்சி!

## சீனி விலைகுறைப்பின் எதிரொலியாம்

யாழ்ப்பாணம், வெள்ளி
பங்கீட்டு முறையில் வழங்கப்படும் சீனியின் அளவு அதிகரிக்கப்பட்டதும் பிரத்தியேக பாவனைச் சீனியின் விலை இருத்தலுக்கு ஒருரூபாவினால் குறைக்கப்பட்டதும் வடபகுதியில் உள்ள தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக்கூட்டுறவுச் சங்கங்களுக்குப்பெரும் பிரச்னையை ஏற்படுத்தியுள்ளதாம்.

5 ரூபா 50 சதத்திற்கு விற்கப்பட்டுவந்த ஒரு இருத்தல் பனங்கட்டி தற்போது 4 ரூபாவுக்குக்கூட விற்கமுடியாதநிலை அரசாங்கத்தின் மேற்படி நடவடிக்கையால் ஏற்பட்டுள்ளதாகச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒரு கலன் பதநீரை 3 ரூபாவுக்குக்கொள்வனவு செய்து சராசரி ஒரு இருத்தல் பனங்கட்டியைப்பெறும் சங்கங்கள் மொத்த விற்பனையின்போது ஒரு இருத்தல் பனங்கட்டியை 3 ரூபா 60 சதத்திற்கு விற்பனை செய்யவேண்டிய நிலையும் உருவாகியுள்ளது எனக் கூறப்படுகிறது.

வித்தியாசமாகிய 60 சதம் உற்பத்திச் செலவுகளுக்கும் ஏனைய செலவுகளுக்கும்போதாமல் இருப்பதன் காரணமாக வடபகுதியின் 19 சங்கங்களும் பிரச்னைக்குள்ளாகியுள்ளனவாம்.

இதேசமயம் சீனியின் விலை மேலும் குறைக்கப்படுமாயின் பனங்கட்டி உற்பத்தி நிலையங்களை மூடவேண்டிய நிலையும் ஏற்படலாம் என சம்பந்தப்பட்டவட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

எனவே மேற்படி சங்கங்கள் ஒன்றிணைந்து ஓர் ஆலோசனைக்கூட்டம் நடாத்தி இது பற்றி அரசாங்கத்திற்கு முறையிடுவதற்குத் தீர்மானித்துள்ளன. (வரணி-நி-உ)

# பர்மாவில் செல்வா பிறந்தநாள் விழா

ரங்கூன், ஏப். 15
மூதறிஞர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் 80 வது பிறந்ததின விழா பர்மாவிலும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

ரங்கூன் திங்காஞ்சூனில் கடந்த மாதம் 31 ம் திகதி பிறந்ததின விழா கொண்டாடப்பட்டது.

திங்காஞ்சூன் போகா வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ ஜெய சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு மேற்படி ஆலயப் பொதுநலக் குழுவின் முன்னாள் தலைவர் திரு. பி. நடராஜன் தலைமை வகித்தார்.

தமிழர்களின் நல்லுக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்து சேவை செய்துவருபவரும் இலட்சியபுருஷரும் மூதறிஞருமான திரு. செல்வநாயகம் நீண்டகாலம் வாழ்ந்து 'தமிழ் ஈழத்தை' மலரவைக்கவேண்டும் என்று விழாவில் உரையாற்றிய பலரும் தெரிவித்தனர்.

விழாச் செயலாளர் திரு. எஸ். பி. சிவநேசன் விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

விழாவின் இறுதியில் சிற்றுண்டியும் வழங்கப்பட்டது. (வே, நி-இ)

ஈழத் தமிழ்த்தொண்டர் சபை

## நல்லூரில் நாளை மறுதினம் தேர்தல் மகாநாடு

யாழ்ப்பாணம், வெள்ளி
ஈழத்தமிழ்த் தொண்டர் சபையின் தேர்தல் மாநாடு நாளை மறுதினம் நல்லூரில் திரு. சி. சுந்தரலிங்கம்தலைமையில் நடைபெறவிருக்கிறது.

நல்லூர், செட்டித்தெரு ஒழுங்கையில் 4-ம் இலக்க இல்லத்தில் நடைபெறவிருக்கும் இம்மாநாட்டில் அடுத்த பொதுத்தேர்தல்தொடர்பான விஷயங்கள் பற்றிஆராயப்படவிருக்கின்றன.

ஈழத்தமிழர் தொண்டர் சபையை அரசியல்கட்சியாக அங்கீகரிப்பதற்கான ஒழுங்குகள் நடைபெற்றுவருவதாக திரு. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

70-ம் ஆண்டு தேர்தலின்போது, தமது இயக்கத்தை அரசியல் கட்சியாக அங்கீகரிக்குமாறு தேர்தல் ஆணையாளருக்கு விண்ணப்பித்ததாகவும், ஆனால் அது நடைபெறவில்லை என்றும் கூறிய திரு. சுந்தரலிங்கம், இம்முறை நிச்சயம் அங்கீகாரம் கிடைக்கும் என நம்பிக்கை தெரிவித்தார்.

தேர்தல் சின்னம்பற்றி இன்

(8-ம் பக்கம் பார்க்க)

மூதறிஞர் உடல்நிலை:

## மேதினத்திற்கு முன் மூர்ச்சை தெளியலாம்

யாழ்ப்பாணம், வெள்ளி
மூதறிஞர் செல்வாவுக்கு மே மாதம் 1.ம் திகதிக்கு முன்னர் மூர்ச்சை தெளியும் என டாக்டர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். இன்னும் இரு வாரத்தில் மூர்ச்சை தெளிவதற்கான அறிகுறிகள் காணப்படுவதாகவும் டாக்டர்கள் தெரிவித்தனர்.

கடந்த மூன்று வாரங்களாக மயக்கமுற்ற நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் மூதறிஞர் செல்வநாயகம், படிப்படியாக சுகமடைந்துவருகிறார். ஆனால் இன்னும் மூர்ச்சை தெளியவில்லை. கால், கைகளில் ஏற்பட்டுள்ள அசைவுகளில் நல்ல முன்னேற்றம் காணப்படுவதாகவும் டாக்டர்கள் தெரிவித்தனர். கடந்த சில தினங்களாகக் கண் இமைகளை மெதுவாகத் திறக்கவும் முயற்சித்து வருகிறாராம்.

புதுவருட தினத்தன்று மூதறிஞர் செல்வாவுக்கு இலேசான காய்ச்சல் காணப்பட்டதாகவும், நேற்றுக் காய்ச்சல் குறைந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

தொடர்ந்து நாசிமூலம் குழாயினால் நீர்ப்பதார்த்தங்கள் கொடுக்கப்பட்டுவருகிறது" (க-அ)

தமிழர் விடுதலைக் கூட்டணி

## தேர்தல் விஞ்ஞாபனம் நாளை ஆராயப்படும்!

யாழ்ப்பாணம், வெள்ளி
தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் நாளை யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கூட்டணி நடவடிக்கைக் குழுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

இக்கூட்டத்தில் கூட்டணி நடவடிக்கைக் குழுவினால் தேர்தல் விஞ்ஞாபனம் ஆராயப்பட்டு அங்கீகரிக்கப்படும்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் கருத்தும் இடம் பெறும் எனத் தெரியவருகிறது.

மலையகத் தோட்டத்தொழிலாளர்களின் நிலைபற்றியும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்படும் எனக் கூறப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைக்காரியாலயத்தில் நடைபெறவிருக்கும். இக்கூட்டத்தில் தமிழர்விடுதலைக் கூட்டணித் தலைவர்களான மூதறிஞர் செல்வநாயகம், எம். சிவசிதம்பரம் ஆகியோர் கலந்துகொள்ளமாட்டார்கள். கூட்டணியின் மற்றொரு தலைவரான திரு. எஸ். தொண்டமான் கலந்துகொள்வார் இன்றைய அரசியல் சூழ்நிலைபற்றியும் இக் கூட்டத்தில்ஆராயப்படவிருக்கிறது.

# சாதி, சமய, இனபூசல்களை மறந்து வாழ்வோம்

## பிரதமரின் புத்தாண்டுச் செய்தி

கொழும்பு, வியாழன்
சாதி, மத, இனப் பூசல்களை மறந்து இந்நாட்டு மக்கள் செயற்படப் புத்தாண்டு வழிவகுக்குமெனப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தமது புத்தாண்டுச் செய்தியில் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்நாட்டு மக்களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சி, தியாகம் போன்றவற்றின் பெறுபேறுதான் பூரண சயா

(8-ம் பக்கம் பார்க்க)

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியாழன்
மினுவாங்கொடையில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 610-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
49 X 0477
ரூபா 1,00,000

இரண்டாவது பரிசு
37 C 0582
ரூபா 40,000

மூன்றாவது பரிசு
32 Y 0850
ரூபா 10,000

தலா 1000 ரூபா ஆறுதல் பரிசு பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம்:

| | |
|---|---|
| 27 A 0567 | 32 A 0626 |
| 39 A 0465 | 40 A 0567 |
| 50 A 0209 | 27 A 0990 |
| 46 A 0906 | 23 B 0549 |
| 02 B 0142 | 43 B 0981 |

[8-ம் பக்கம் பார்க்க[

# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

16-4-77; 17-4-77ல் ஊர்காவற்றுறை புனித. அந்தோனியார் கல்லூரி களியாட்டு மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள 'மில்க் வைற்' விளம்பர காட்சி சாலையில் சோப் வாங்கும் அன்பர்களுக்கு பல சிறந்த இனம் பொருட்கள் அன்பளிப்பாக கொடுக்கப்படும். மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம்.
5919

THE JAFFNA ACADEMY
VACANCY FOR TEACHERS

Graduates or Graduands for Advanced-Level work in Botany, Zoology and Chemistry. Only those who can do this work with confidence apply to The Director before 30th April 1977.

Those completing the degree this year at the University can also apply. Retired teachers also can apply.

Director.

376, Main Street,
Chundikuli, Jaffna.
Phone No. 617
5913

நயினாதீவு கிராமசபை

## கேள்வி விளம்பரம்

நயினாதீவு கிராமசபை காரியாலய பழைய கட்டிடத் திருத்தவேலைக்கு கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப்பத்திரங்கள் ரூபா 25/00 கேள்விப்பணமாகவும் ரூபா 3/- பத்திரப்பணமாகவும் 22-4-77 பகல் 12மணி வரையும் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விகள் 25-4-77 காலை 10 மணிக்கு நடைபெறும் கூட்டத்திலும் அல்லது அதற்கு முன் பதிவுத்தபாலிலும் தலைவருக்கு அனுப்பப்படல்வேண்டும்.

ஏனைய விபரங்கள் கிராம சபை அலுவலகத்தில் கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

இங்ஙனம்
அ. நல்லையா
உபதலைவர்.
கிராமசபை அலுவலகம்,
நயினாதீவு,
11-4-77.
5922

## விற்பனைக்கு

முட்டையிடும் பருவத்திலுள்ள 'ஹைலயின்' கோழிகள் விற்பனைக்குண்டு. முருகையா, கண்டிவீதி, யாழ்ப்பாணம். போன்: 7115.
5916

## அறிவித்தல்

08-04-77ல் ஈழநாட்டுப் பத்திரிகையில் கொக்குவில் கிராமசபை விசேட ஆணையாளரால் விளம்பரப்படுத்தப்பட்ட வேலைகளின் விபரம் பின்வருமாறு:

(1) நெட்டிலிப்பாய் பிள்ளையார்கோவில் ஒழுங்கை, (2) கமட்டான் ஒழுங்கை, (3) செம்பாட்டு ஒழுங்கை, (4) செருக்கன்புலம் ஒழுங்கை, (5) பொற்பதி 2ம் ஒழுங்கை, (6) சாம்பியன் ஒழுங்கை, (7) அன்னுங்கை ஒழுங்கை, (8) நவரத்தினராசா வீதி, (9) சைவப்பாடசாலை கோண்டாவில் வடக்கு ஒழுங்கை, (10) சைவப்பாடசாலை கோண்டாவில் தெற்கு ஒழுங்கை.

(அ) கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி:
28-04-77 காலை 10-00மணி

(ஆ) கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி:
25-04-77 மாலை 3-00 மணி வரையும்.

(இ) வைப்புப் பணம்:
ரூபா 100/-

(ஈ) கிரயம்:
ரூபா 25/-

இ. புஸ்பராசா
விசேட ஆணையாளர்,
கொக்குவில் கி. ச.
11-4-77
5931

## மெய்வல்லுநர் போட்டி

திருகோணமலை, வியாழன்

நிலாவெளி மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினர்களாக எம்.பி. திரு.பி. நேமிநாதன், கல்வியதிகாரி ஜனாப் எம்.எம். மன்சூர் ஆகியோர் கலந்து கொண்டனர். வித்தியாலய அதிபர் திரு. கனகசபாபதி நன்றியுரை நிகழ்த்தினர். (உ)

## கேள்வி விளம்பரம்

1977-ம் ஆண்டு சித்திரை மாதம் 29-ம் திகதி முற்பகல் 9-30 மணிவரை கீழ் காட்டப்படும் வேலைகளுக்கு காரைநகர் வடக்கு கிராமப்பிரதேச விசேட ஆணையாளரால் அரக்குமுத்திரை வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரப்பணம் ரூபா 25-00ம் கேள்விப் பிணைப்பணம் ரூபா 100-00ம் கட்டியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் 28-4-77-ந் திகதி பிற்பகல் 3-00 மணிவரை வழங்கப்படும்.

3. கேள்விப் பத்திரத்தின் பிரதி யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் அதே திகதியிலும், நேரத்திலும் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால்மூலம் அனுப்பப்படல்வேண்டும்.

4. இதுசம்பந்தமான விபரங்கள் யாவும் எமது கிராமப் பிரதேசத்திலும் யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திலும் அறிந்துகொள்ளலாம்.

### வேலைகளின் விபரம்

1. மாரி அம்மன் வீதி
2. பத்தர் கேணி வீதி
3. வேம்படி வீதி
4. மாப்பாண ஊரி வீதி
5. நடுத்தெரு
6. சுப்பிரமணிய சுவாமிவீதி

வேலுப்பிள்ளை மாரிமுத்து
விசேடஆணையாளர்,
கிராமப்பிரதேசம்,
காரைநகர் வடக்கு.
7-4-77.
5921

# வெள்ளவத்தை நெசவாலை: ரூ. 80 லட்சம் லாபம்

கொழும்பு, வியாழன்

வெள்ளவத்தை நெசவாலைக்கு ஒன்பது மாத காலத்தில் 80 லட்சம் ரூபா லாபமாகக் கிடைத்துள்ளது.

கடந்தவருடம் மார்ச்மாதத்தில்அரசுடைமையாக்கப்பட்ட பின்னர் கடந்தஒன்பது மாதங்களுக்குள் செலுத்தப்படும் சகல வரிகளும் நீங்கலாக 80 லட்சம் ரூபாவை லாபமாகச் சம்பாதித்துள்ளது.

இத்தொழிற்சாலை மூடப்படும் பட்சத்தில் அங்கு கடமையாற்றும் சுமார் 3,000 தொழிலாளர்கள் அநாதரவான நிலையை அடைவதைத் தவிர்க்கும்முகமாக வர்த்தக சுவீகரிப்புச் சட்டத்தின்கீழ் அரசாங்கம் இவ்வாலையைப் பொறுப்பேற்றது.

சுங்க இலாகா அதிகாரி திரு. ஸி. குமாரதுங்க இந்நெசவாலையின் தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். (உ)

## மிருசுவில் கிராம சபை கேள்விப்பத்திர விண்ணப்பம்

மிருசுவில் கிராம சபையால் பின்வரும் வேலைக்கான கேள்வி விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. சபைக்கு திருப்திகரமானமுறையில் வேலையைச் செய்துகொடுக்கக் கூடிய ஒப்பந்தகாரர்களிடமிருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். 26-04-1977ம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 12-00 மணிவரை கேள்விப்பத்தரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

27-04-1977ம் திகதி காலை 10-00 மணிக்கு முன்பு கேள்வி விண்ணப்பங்கள் தலைவருக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கேள்வி விண்ணப்பத்தின் பிரதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் யாழ்ப்பாணம், அவர்களுக்கு 27-04-1977ம் திகதி கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல்வேண்டும். மேலதிக தகவல்களை இக்காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

1. வடக்கு மிருசுவில் வீதி.

ஒப்பம்
க. குலசேகரம்பிள்ளை
J. P.
அக்கிராசனர்,
கிராம சபை, மிருசுவில்
கிராமசபை அலுவலகம்.
மிருசுவில்.
07-04-1977
5925

## யாழ். கதீஜா பெ. ஆ. சங்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். கதீஜா மகளிர் கல்லூரி மண்டபத்தில் பெற்றோர் ஆசிரியர் சங்கத்துக்கான அங்குரார்ப்பணக்கூட்டம் நடைபெற்றது. கல்லூரி அதிபர் ஜனாபா எல். மொஹிதீன் தமதுரையின்போது 'நீண்டகாலமாக சிறந்த பெறுபேறுகளை உருவாக்கிவரும் நமது கல்லூரியின் கல்வித்தரத்தை மேலுயர்த்துவதற்கு அரசினரை மட்டுமே நம்பியிராமல் நாமும் நம்மாலியன்ற வழிகளில் முயற்சிகளை எடுக்கவேண்டியது அவசியமாகும்' என்றார்.

மேற்படி கூட்டத்தின் உத்தியோகத்தர் தெரிவின்போது பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

செயலாளர் ஜனாபா ஜே. அப்துல் அஸீஸ், பொருளாளர்: அல்ஹாஜ் எம். மீராசாகிப், உபசெயலாளர் ஜனாப் என். எம். ஷாபி. 9பேர் கொண்ட செயற்குழுவும் 3பேர்கொண்ட கணக்குப் பரிசோதகர் குழுவும் தெரிவுசெய்யப்பட்டன. (உ)

## சைவத் தொண்டர் பயிற்சி முகாம்

ஏப்ரல் 15ந் திகதி தொடக்கம் நடைபெறவிருந்த பயிற்சி முகாம், இந்திய அறிஞர்கள் மூவரின் வருகைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தெரிவுசெய்யப்பட்டவர்களுக்குக் காலம் மிக விரைவில் அறிவிக்கப்படும்.

இலங்கைச் சைவ அநாதை இல்லம்
கண்டி வீதி, கைதடி.

ஆ. கந்தையா
பொதுச் செயலாளர்
5923


∴ உறுதியானதும்
∴ நீடித்து உழைப்பதும்
∴ தன்னிகரற்றதுமான

**வைத்திலிங்கம்ஸ்**

இரும்பு — பித்தளை — மரஸ்குறு ஆணிகளை

நீங்கள் வாங்குவதனால்

ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள் என்பதை மறவாதீர்கள்

**என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்**

இரும்பு வியாபாரிகள்
450, பழைய சோனகதெரு,
கொழும்பு - 12
தொலைபேசி: 33143 — 4

கிளை: 138, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530

புத்தாண்டு தினத்தில்
ஓர் மகிழ்ச்சிகரமான செய்தி

கோப்பி போன்று பாவிக்க இதோ

**சோயாற்றின்**

சோயாற்றின் உங்கள் களைப்பை நீக்குவதோடு
தேக ஆரோக்கியத்தையும்
நிறைவான புரதச்சத்தையும் தரவல்லது.
உங்கள் வாடிக்கைக் கடைகளில்
சோயாற்றின்
என்று கேட்டு வாங்குங்கள்.

**அண்ணா தொழிலகம்**

இணுவில். தொ.பே. இல. 7412

கிளை: No. 4, நவீன சந்தை,
யாழ்ப்பாணம். தொ. பே. இல. 7413

Enjoy now
With
SOYATINE
Substitute for Coffee powder.
Delicious invigorating
Beverage.

Anna Industry

# தமிழ்நாட்டில் ஜனதா கட்சிக்கு வலுவூட்டும் நடவடிக்கை!

## நிலைமையை ஆராய குழுவும் நியமனம்; 15க்குள் அறிக்கை

### மத்திய அமைச்சர் ராமச்சந்திரன் தகவல்

சென்னை, ஏப்ரல் 14

**தமிழ்நாட்டில் ஜனதா கட்சிக்கு வலுவூட்டும் நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக அணுசக்தி அமைச்சர் திரு. பி. இராமச்சந்திரன் இன்று சென்னையில் தெரிவித்தார்.**

தமிழ்நாடு அரசியல் நிலை குறித்து நிருபர்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் இராமச்சந்திரன் இவ்வாறு கூறினார்.

தமிழ்நாடு பூராவும் ஜனதா கட்சிக்கிளைகளை அமைப்பதில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் சொன்னார். அத்துடன் தமிழ்நாட்டில் ஜனதா கட்சிக்குள்ள ஆதரவு நிலைமை குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்தக்குழு அடுத்த மாதம் 15-ம் திகதிக்கு முன் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

லோகசபை உறுப்பினராகவும், அமைச்சராகவும் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டபோது கையாண்ட மொழிசம்பந்தமாக தம்மீது எதிர்க்கட்சியினரால் சுமத்தப்படும் குற்றச்சாட்டு விஷமத்தனமானது என்று திரு. இராமச்சந்திரன் கூறினார்.

லோகசபை உறுப்பினருக்கான சத்தியப்பிரமாணத்தை தமிழ் மொழியிலும், அமைச்சருக்கான சத்தியப்பிரமாணத்தை ஆங்கிலத்திலும் எடுத்துக் கொண்டதாக அவர் குறிப்பிட்டார்.

**பஸ்ஊழியர் வேலைநிறுத்தம்**

பெரியார் போக்குவரத்துக் கழக பஸ் ஊழியர்களின் வேலை நிறுத்தத்தின் போது தொழிற்சங்கப் பிரதிநிதிகளான சித்தர், கே. ஆர். சுந்தரம் ஆகியோருடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தையை தொடர்ந்து வேலை நிறுத்தம் கைவிடப்பட்டதாகவும், சம்பந்தப்பட்ட இலாகா இவர்களின் கோரிக்கையை பரிவுடன் கவனிக்கும் என்றும் அமைச்சர் இராமச்சந்திரன் தெரிவித்தார். (ஆ)

## எம்.ஜி.ஆர். எதிர்க் கோஷ்டி

### மத்திய அமைச்சரை சந்தித்தது

சென்னை, ஏப். 14

அ. தி. மு. க. பொதுச்செயலாளர் திரு. கோவை செழியன் மத்திய அணுசக்தி அமைச்சர் திரு. பி. இராமச்சந்திரனை சென்னையில் இன்று சந்தித்து தமிழ்நாட்டு அரசியல் நிலைமை குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

மத்திய அமைச்சர் இங்கு வந்திருந்தபோது பத்திரிகையாளர்கள் இவரைச் சந்தித்து உரையாடினர். அப்போது தமிழ்நாட்டு அரசியல் நிலைமை குறித்து அமைச்சரிடம் பிரஸ்தாபித்தபோது ஜனதா கட்சியை தமிழ்நாட்டில் வலுவடையச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இப்படியிருக்க எம். ஜி. ஆர். தலைமையிலான அனைத்திந்திய அ. தி. மு. க. விலிருந்து வெளியேறி அ. தி. மு. க. அமைத்துக்கொண்டுள்ள இக்கட்சியின் பொதுச்செயலாளரான கோவை செழியன் இன்று மத்திய அமைச்சர் இராமச்சந்திரனைச் சந்தித்துப் பேசினார். (ஆ)

## அணுஆயுதம் பரவுவதை கார்ட்டர் கண்டிக்கிறார்

வாஷிங்டன், ஏப் 14

அணுஆயுத ஆற்றல் பல நாடுகளுக்குப் பரவுவதைத் தடுக்கச் சர்வதேச 'இணைப்பு' ஒன்று அவசியமென ஜனாதிபதி கார்ட்டர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அணுசக்தித் திட்டத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விவரங்களைக் காங்கிரஸில் அறிவிக்கும்போது அவர் இதுபற்றிக் குறிப்பிட்டார். சில நாடுகள் சமாதானத் தேவைகளுக்காக மின்சக்தி உற்பத்தி செய்யும் அணுசக்தி நிலையங்களை அணுஆயுத உற்பத்தி ஆற்றலைப் பெருக்குவதற்காகப் பயன்படுத்தியுள்ளன என்பது தெளிவு என்றும் அவர் சொன்னார்.

அணுஆயுதத் தொழில்நுட்பம் ஏனைய நாடுகளுக்குப் பரவுவதைத் தடுப்பதுதொடர்பாக அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் வான்ஸ் வெளியிட்ட யோசனைகளுக்கு மாஸ்கோவில் சோவியத் தலைவர்களின் ஆதரவு இருந்தது என்றும் ஜனாதிபதி கூறினார். மே மாதம் 7ம், 8ம் திகதிகளில் லண்டனில் நடைபெற இருக்கும் உச்சிமகாநாட்டில் தாம் இந்தப் பிரச்னையை விவாதிக்க உத்தேசித்திருப்பதாகவும் அவர் சொன்னார். இந்த மகாநாட்டில் அமெரிக்கா, கனடா, ஜப்பான், பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, இத்தாலி, பிரிட்டன் ஆகிய நாடுகளின் தலைவர்கள் ஒன்று கூடுவர்.

## காங்கிரஸ் தோல்வி முழுப்பொறுப்பையும் இந்திரா காந்தி ஏற்றார்

### காரியக்கமிட்டிக்கு அவர் கடிதம்

புதுடில்லி, ஏப். 14

காங்கிரஸ் ஆட்சியின் வீழ்ச்சிக்கான முழுப் பொறுப்பையும் தாம் ஏற்றுக்கொள்வதாக திருமதி இந்திராகாந்தி தெரிவித்துள்ளார். காங்கிரஸ் கமிட்டிக்கு திருமதி இந்திராகாந்தி எழுதியுள்ள கடிதமொன்றில் இதனைஒப்புக்கொண்டுள்ளார். காங்கிரஸ் ஆட்சி வீழ்ச்சியடைவதற்கு இருந்த காரணங்கள் அனைத்தையும் தாம் ஏற்றுக்கொள்வதாக இவர் தமது கடிதத்தில் ஒப்புக்கொண்டுள்ளார்

காங்கிரஸ் கட்சியின் கூட்டம் ஆட்சி மாறிய பின்னர் நேற்றுமுன்தினம் கூடியபோது திருமதி இந்திராகாந்தி அக்கூட்டத்துக்கு வரவில்லை, இதனால் குறிப்பிட்ட நேரத்தில் கூட்டத்தை ஆரம்பிக்கமுடியவில்லை.

தொடர்ந்து திரு. வை. பி. சவான், திரு. பருவா, கமலபதி திரிபாதி போன்ற காங்கிரஸ் தலைவர்கள் இந்திராகாந்தியின் இல்லத்துக்குச் சென்று அவரை அழைத்துவந்தனர்.

தேர்தலில் காங்கிரஸுக்கு ஏற்பட்ட படுதோல்வி குறித்தும், இன்றைய அரசியல் நிலை குறித்தும் பரிசீலிக்கவே இக்கூட்டம் கூட்டப்பட்டது.

காலை நடைபெற்ற கூட்டத்தில் இந்திராகாந்தியின் புதல்வர் சஞ்சேய்காந்தி, பஞ்சிலால் ஆகியோரின் நடவடிக்கையே காங்கிரஸின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று இங்கு பேசிய பலரும் கருத்து வெளியிட்டனர். ஒருசிலர் இந்திராகாந்திதான் இதற்கெல்லாம் காரணம் என்று குற்றஞ்சாட்டினர்.

(3-ம் பக்கம் பார்க்க)

## தலைவர் பதவியிலிருந்து பருவா ராஜினாமா!

புதுடில்லி, ஏப். 14

காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து திரு. பருவா ராஜினாமா செய்துகொண்டுள்ளார். இவரது ராஜினாமா குறித்து உத்தியோகபூர்வமாக இன்று அறிவிக்கப்பட்டது.

காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கூட்டம் நடந்து முடிந்த பின்னர் பருவா தமது ராஜினாமாவைச் சமர்ப்பித்துள்ளார்.

ஏற்கனவே காங்கிரஸ் கட்சியின் பிரதம கொறடாவான திரு. கே. ரகுராமையா தமது பதவியிலிருந்து வெளியேறியிருப்பது தெரிந்ததே. (ஆ)

## லஞ்சம், நிர்வாக ஊழல் அரசை திருப்பியழைக்க மக்களுக்கு உரிமை!

### ஜெயப்பிரகாஷ் வலியுறுத்து; நோய்ப் படுக்கையிலிருந்தாலும் வழிநடத்த உறுதி

புதுடில்லி, ஏப். 14

**லஞ்சம் மற்றும் நிர்வாக ஊழலில் ஈடுபடும் அரசைத் திருப்பியழைக்கும் உரிமை மக்களுக்கு இருக்கிறது என்று திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் கூறியிருக்கிறார்.**

அரசியல் சாஸனத்தில் இந்த உரிமை குறிப்பிடப்படாதது ஒரு குறையாகவே இருந்து வருவதாகக் கூறிய அவர் எழுத்து மூலம் இந்த உறுதி மக்களுக்கு அளிக்கப்படவில்லையானாலும், எந்தச் சந்தர்ப்பத்திலும் மக்களுக்கு இந்த உரிமை, இருக்கிறது என்று திரு. ஜெயப்பிரகாஷ் குறிப்பிட்டார்.

குஜராத் முதல் பிகார்வரை கல்லூரி மாணவர்களும் பொது மக்களும் முன்னர் நடத்திய இயக்கம் தான் காங்கிரஸ் ஆட்சி மாறுவதற்கு வழியேற்படுத்தியது என்று அவர் தெரிவித்தார்.

பம்பாய் ஆஸ்பத்திரியொன்றில் சிகிச்சை பெற்றுவரும் திரு. ஜெயப்பிரகாஷ்நாராயண் இந்து பத்திரிகையாளரிடம் பேசினார். நோய்வாய்ப்பட்டு படுக்கையில் இருந்தாலும்கூட நாட்டை நல்வழியில் இட்டுச்செல்வதில் தமதுபங்கு தொடர்ந்து இருக்கும் என்று அவர் குறிப்பிட்டார். ஜெயப்பிரகாஷின் உடல் நிலையில் திருப்தி நிலவுவதாக இன்று வெளியிடப்பட்ட வைத்திய அறிக்கைகள் கூறுகின்றன.

முறைகேடான நிர்வாகம் நடத்தும் எந்தவொரு அரசாங்கத்தையோ, அல்லது எந்தவொரு தனிப்பட்ட பிரதிநிதியையோ அகற்றி விடுவதற்கு மக்களுக்கு உரிமை இருக்கிறது என்று ஜெயப்பிரகாஷ் குறிப்பிட்டார். இந்த விடயத்தில் மக்களின் எழுச்சிதான் ஜனதா அரசு என்றார் அவர்.

மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சி நீடித்து வருவதாகக் குறிப்பிட்ட அவர், உடனடியாக தேர்தலை நடத்தி மக்களின் தீர்ப்பை அறியவேண்டும் என்றார் ஜெயப்பிரகாஷ். (ஆ)

## ஜம்மு காஷ்மீரில் கலகம்

ஸ்ரீநகர், ஏப்ரல் 14

ஜம்மு காஷ்மீரில் ஏற்பட்ட கலகத்தில் 17 பேர் காயமடைந்தனர். இவர்களில் பொலிஸ்இன்ஸ்பெக்டர் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக வுள்ளது.

ஸ்ரீநகரில் நடந்த கலவரத்தில் பொதுமக்களும் பொலிஸாரும் மோதிக்கொண்டனர். ஆட்சியிலிருந்தவர்களின் கட்சி மாறல் நடவடிக்கை காரணமாக மாநில ஆட்சி இங்கு வீழ்ச்சியடைந்தது தெரிந்ததே.

தொடர்ந்து இங்கு குழப்பம் நிலவிவருகிறது. (ஆ)

**மணிவாக்கு**

கடவுள் திருப்திப்படுவதற்குத்தான் நாம் நடக்க வேண்டும். போற்றுவதாயின் அவரையே போற்ற வேண்டும். அப்படி நடந்தால், எல்லாக் கவலைகளும் அலைச்சல்களும் எம்மைவிட்டு நீங்கும்.

— காந்திமகான்

ஈழநாடு
THE EELANADU

## கிளர்ச்சி நடவடிக்கை

நாட்டின் பல பகுதிகளிலும் சமீபகாலமாக நடைபெற்றுவரும் கிளர்ச்சி நடவடிக்கைகள்பற்றி அரசாங்கத்துக்குக் கிடைத்துள்ள தகவல்களைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்குத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்புப் படைகள் தெரிவித்துள்ள கிளர்ச்சிச் சம்பவங்கள்பற்றிய பூரண விபரங்களை எதிர்க்கட்சித் தலைவரிடம் பிரதமர் தெரிவித்திருக்கிறார்.

1970-ம்ஆண்டுப்பொதுத் தேர்தலுக்குமுன் நிலவிய அரசுக்கு எதிரான கிளர்ச்சி நடவடிக்கைகள்பற்றி அன்றைய ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கம் எதிர்க்கட்சித் தலைவியாக இருந்த தம்மிடம் தெரிவிக்கவில்லையென்றும் நாம் ஆட்சிக்கு வந்த பின்னரே அதுபற்றிய தகவல்களைப் பெறமுடிந்ததென்பதையும் எதிர்க்கட்சித் தலைவருக்குப் பிரதமர் சுட்டிக்காட்டிருக்கிறார்.

தம்மீதுநம்பிக்கைவைத்து இத்தகவல்களைத் தமக்குத் தெரிவித்ததற்காக எதிர்க்கட்சித்தலைவர் பிரதமருக்கு நன்றி தெரிவித்திருக்கிறார்.

நாட்டின் பாதுகாப்பையும் பொதுநலனையும் கருத்தில்கொண்டு பிரதமரும் எதிர்க்கட்சித்தலைவரும் சந்தித்துப் பேசியிருப்பதும் பரவலாக மீண்டும் கிளர்ச்சி நடவடிக்கைகள் நடைபெற்றுவருவதுபற்றிய தகவல்களை இருவரும் கவனத்துக்கெடுத்துள்ளதும் பாராட்டுக்குரியது.

1970ம் ஆண்டுத் தேர்தலுக்குமுன் பல இடங்களில் கிளர்ச்சி நடவடிக்கைகள் இடம்பெற்றன. இதுபற்றி அரசுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டும் அரசு உடன் தகுந்த நடவடிக்கை எடுக்காததே 1971-ம் ஆண்டுக் கிளர்ச்சிக்குக் காரணமென்று குற்றம் சுமத்தப்படுகிறது.

1970-ம் ஆண்டுத் தேர்தலுக்குப் பல மாதங்களுக்கு முன்னரே பலஇடங்களிலும் சம்பவங்கள் நடைபெற்றபோது, நாட்டில் இல்லாத ஒரு 'நாம் தமிழர் இயக்கம்' என்ற பெயரைச் சிருஷ்டித்து அந்த இயக்கத்தின் நடவடிக்கைகளே இவையென்றுதிசைதிருப்பப்பட்டதற்கு யார் காரணம் என்பதை ஆராய்வதும் பயனளிக்கும்.

1958-ம் ஆண்டில் நாட்டில் துரதிர்ஷ்டமான வகுப்புக்கலகம் தலையெடுப்பதற்குப் பல மாதங்களுக்கு முன்னரே கொழும்பிலும் வெளியிடங்களிலும் வாழ்ந்த தமிழர்களுக்கு வந்த பயமுறுத்தல் கடிதங்கள் பற்றியும் துண்டுப்பிரசுரங்கள், வீடுகளுக்கு அடையாளமிடுதல் போன்ற நடவடிக்கைகள் குறித்து அச்சமயத்தில் பார்லிமெண்டில் அரசின் கவனத்துக்கு முன்னாள் வவனியாப் பிரதிநிதி திரு. சி. சுந்தரலிங்கம் பல தடவைகள்கொண்டு வந்திருந்தார். ஆனால் அதுபற்றி யாரும் அக்கறை செலுத்தவில்லை.

1970-ம் ஆண்டுக்குமுன் நடந்த கிளர்ச்சிச் சம்பவங்கள் பற்றிய தகவல் தெரிந்ததும் அக்கறை செலுத்தி உரியநடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் 1971-ம் ஆண்டுக்கிளர்ச்சி நடைபெறுமல் தவிர்த்திருக்கலாம்.

இதேபோல் 1958-ம் ஆண்டுவகுப்புக் கலவரமும் நடைபெருமல் காப்பாற்றியிருக்கமுடியும்.

இப்போது புதிய கிளர்ச்சி நடவடிக்கைகள் பற்றிய தகவல் பற்றி எதிர்க்கட்சித் தலைவருக்கும் தெரிவித்துள்ளது, இதுபோன்ற தேசவிரோத, சமூக விரோதச் செயல்களுக்கு இனியும் நாட்டில் இடமிருக்காது என்ற நம்பிக்கையளிப்பதாகும்.

# 'தமிழின ஒற்றுமையை ஜி.ஜி. உலகறியச் செய்தார்'

### பருத்தித்துறை எம். பி.

வல்வெட்டித்துறை,வியா.

தமிழ்மக்களின் ஒருமைப்பாட்டைச் சிதறடிக்கப் பல பிற்போக்குச்சக்திகள் முனைந்து வருகின்றன. இப்பிற்போக்குச் சக்திகளுக்கு தமிழ் மக்கள் இடம்கொடுக்காது, அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் விரும்பிய ஒருமைப்பாட்டைத் தொடர்ந்து பேணவேண்டும்''

இவ்வாறு வல்வெட்டிவேவில் பிள்ளையார் கோவிலடியில் நடைபெற்ற அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் அஞ்சலிக் கூட்டத்தில் பேசிய பருத்தித்துறை எம். பி. திரு கே. துரைரத்தினம் கூறினர்.

திரு. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. துரைரத்தினம் தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தை கடந்த 32 வருடங்களாக எனக்குத்தெரியும். 1944ல் தமிழ்க்காங்கிரஸ்கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த நான் அவரின் ஆதரவாளனுகஇருந்ததுடன் அவரது கட்சியில் சேர்ந்து உழைத்தேன். ஆனல் இடையில் ஏற்பட்ட சிறு வித்தியாசங்களினுல் நாம் பிரிந்து மீண்டும் ஒன்றுகூடி ஒற்றுமையானேம். எமது ஒற்றுமை வட்டுக்கோட்டைத் தீர்மானத்துடன்பலப்பட்டது அந்நேரத்தில் ஜி. ஜி. சமுகமளிக்கவில்லையே என்று பலரும் வேதனை தெரிவித்தபோது, அரசு, அமரர் ஜி. ஜி. தமிழிவத்திற்கு செய்யவேண்டிய கடமைக்கு ட்ரயல் அற்பார் வழக்கு மூலம் வித்திட்டது அவ்வழக்கின் மூலம் மாபெரும் வெற்றியையீட்டித்தந்ததுடன் தமிழினத்தின் ஒற்றுமையை உலகறியச்செய்தார். இறுதிக் காலததில் அமரர் விரும்பிய ஒருமைப்பாட்டை நாம் சிதறடிக்காமல் ஒவ்வொரு தமிழ் மகனும் செயல்படவேண்டும்.

உடுப்பிட்டி எம். பி. திரு. கே. ஜெயக்கொடி பேசுகையில் அமரர் ஜி. ஜி. ஆற்றிய சேவைகளையும், அவர்விட்டுச் சென்ற பணியையும் தமிழினம் தொடர்ந்து செய்யவேண்டுமென்றார்.

கூட்ட ஆரம்பத்தில் சுகவீனமுற்றிருக்கும் திரு. செல்வநாயகம் எம். பி. குணமடைவேண்டி இக்கோவிலில் விசேட பூசையும், பிரார்த்தனையும் செய்யப்பட்டது.

(நெல். நி.)

## "கூட்டுறவு ஊழியரின் பதவிகள் நிரந்தரமாக வேண்டும்"

### அமைச்சரிடம் கோரிக்கை

நீர்வேலி, வியா

'தற்போது கூட்டுறவுச்சங்கங்களில் வேலைசெய்பவர்கள் தத்தம் பதவிகளில் நிரந்தரமாக்கப்பட வேண்டும்' என்று சிறிலங்கா சுதந்திர கூட்டுறவு ஊழியர்சங்க வடபிராந்தியத் தலைவர், கூட்டுறவு அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்காவைச் சந்தித்துக் கேட்டுக் கொண்டுடுள்ளார்.

வடபிராந்தியத் தலைவர் திரு. சி. கதிர்காமத்தம்பி தமது தாய்ச்சங்கத்தின் உதவியுடன் அமைச்சரைச் சந்தித்து கூட்டுறவு ஊழியர்களின் கஷ்டங்களை எடுத்துக் கூறினர்,

கூட்டுறவு ஊழியர்களுக்கு ஆகக்குறைந்த சம்பளம் 250 ரூபாவாக இருக்க வேண்டும் என்றும் கூட்டுறவு ஊழியர்களின் லீவு நாட்கள் கூட்டப்பட்டு அவை 48 நாட்களாகக் கணிக்கப்பட வேண்டும் என்றும் அவர் அமைச்சரைமேலும் கேட்டுக் கொண்டார்.

இக்கோரிக்கைகள் பற்றி ஆராய்ந்து கூடியவிரைவில் தாம் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## "நல்ல சமுதாயத்தை உருவாக்கும் ஆசிரியர்களைப் போற்றவேண்டும்"

யாழ்ப்பாணம், வெள்ளி

"ஆசிரியமணி சுப்பிரமணியம், அதிபர் பண்டிதர் சி. ஆறுமுகம் போன்ருேர்கள் 60 வயது முடியும் வரை சேவை நீட்டப்படத்தக்க திறமைசாலிகள். இவ்வித்தியாலயத்தில் உள்ள அத்தனை ஆசிரியர்களும் பெரும் புகழீட்டியுள்ளனர். இலங்கை ஆசிரியர் சங்கம் இதை வலியுறுத்த இது ஏற்ற தருணமாகும்."

இவ்வாறு கொக்குவில் நாமகள் வித்தியாலயததில் அதிபராகப் பத்தாண்டுகள் சேவை புரிந்து, இளைப்பாறும் பண்டிதர் சி. ஆறுமுகத்திற்கு எடுக்கப்பட்ட பிரிவுபசாரக் கூட்டத்தில் தலைமைவகித்து உரையாற்றிய புதிய அதிபர் திரு, எஸ். கந்தையா கூறினர்.

அடுத்துப் பேசிய ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம் கூறியதாவது:

"நாமகள் வித்தியாலயப் பழைய மாணவர்கள் இலங்கையில் பல்வேறு துறைகளிலும் மேலான இடத்தை வகிக்கின்றனர். பலர் வெளிநாடு சென்றுள்ளனர். இப்பாடசாலையின் சிரிய சேவைக்கு எல்லா ஆசிரியர்களும் காரணராவர். இதனுல் நல்ல சமுதாயத்தை உருவாக்கும் பிரமதேவர்களாகிய ஆசிரியர்களை நாடும் நாமும் போற்றவேண்டும்."

சிரேஷ்ட ஆசிரியர் திரு. ஏ. சின்னத்துரை, திரு எஸ். பேரம்பலம், திருமதி பரமேசுவரி குணநாயகம் உட்படப் பலர் உரையாற்றினர்.

திரு. சிவபாதம் நன்றி தெரிவித்துப் பேசினர். (அ)

## தனிச்சிங்களத்தில் அனுப்புகிருர்களாம்

திருகோணமலை, வியாழன்

தமிழ்ப் பகுதிகளில் உள்ள நெசவு கூட்டுறவுச் சங்கங்களுடன் சிறுகைத்தொழில் பகுதியினர் தனிச் சிங்களத்திலேயே கடிதத் தொடர்புகளை வைத்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

மேற்படி சங்கங்களுக்கு அடிக்கடி அனுப்பப்படும் சுற்று நிருபங்களைக் கூட சிறுகைத்தொழில் திணைக்களம் தனிச் சிங்களத்திலேயே அனுப்பி வருகிறது.

இது நெசவுக் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளுக்கு சிரமத்தை ஏற்படுத்தியுள்ளதாக அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது. (உ)

## வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மானிப்பாய் மெமோறியல் கல்லூரி பழையமாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று காலை தலைவர் திரு கா. வைத்தியநாதர் தலைமையில் நடைபெறவிருக்கிறது. [உ]

## 'இசைக் கலைஞர்களுக்கு' சமுதாயத்தில் மதிப்புண்டு

யாழ்ப்பாணம், வெள்ளி

"இசைக்கலை தெய்வீகமானது. இசைக்கலைஞர்கள் தெய்வீகமான இசைக்கே தம்மை அர்ப்பணிக்கின்ற காரணத்தால் சமுதாயத்தில் அவர்களுக்கு மதிப்பிருக்கிறது. பிரபல இசைக்கலைஞரான சங்கீத பூஷணம் என். இராசு, தாம் வாழும் மட்டக்களப்புப் பகுதி மட்டுமன்றி ஈழம் முழுவதிலுமே இசைக்கலை வளர்ச்சிக்கு இயன்ற பணி புரிந்துவருகின்ருர்.

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலய வைரவிழா நிகழ்ச்சியில் இன்னிசை விருந்தளித்த மட்டக்களப்பு தாமரக்கேணி கந்தர்வகான இசைவேந்தர் சங்கீதபூஷணம் என். இராசுவின் இசைப் புலமையைப் பாராட்டிப் பொன்னுடை போர்த்திப் பேசிய வடமாநிலக் கல்வியதிபர் திரு. க. சிவநாதன் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

"ஆலயங்கள், பாடசாலைகள் உட்படப் பல பொதுஸ்தாபனங்களுக்குத் தமது இசைக் கச்சேரிகள் மூலம் நிறையப் பொருள் தேடிக் கொடுத்திருக்கிருர். அப்படியான சிறந்த ஒரு கலைஞருக்குப் பிரசித்தி வாய்ந்த உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலய வைரவிழாப் பூர்த்தி நிகழ்ச்சியில் பொன்னுடை போர்த்திக் கௌரவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்."

"பெரியார்கள் இசை மூலம் இறைவனைக் கண்டனர். தூய வாழ்வு வாழ்ந்தனர் எதிர்காலச் சந்ததியின் வளமான வாழ்வைக் குறித்து வித்தியாலயங்களில் கவின் கலைகளான சங்கீதம், நாட்டியம், சித்திரம் ஆகியன நடைபெறக் கல்விப் பகுதி ஒழுங்குசெய்திருப்பது குறிப்பிடத்தக்கது. கல்வித் துறையில் துரித முன்னேற்றம் கண்டுள்ள உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயம் மேலும் வள்ர்ச்சியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்."

வித்தியாலயத் துணை அதிபர் திரு. பஞ்சாட்சரம் பக்கவாத்தியக் கலைஞர்களுக்கு மாலை சூட்டிக் கௌரவித்தார்.

## மர்மமாக மறைந்த பனங்கட்டிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

பனம்கட்டி உற்பத்தித் தொழிற்சாலையில் இருந்து மர்மமான சூழ்நிலையில் சுமார் 750 ரூபா பெறுமதிமிக்க பனங்கட்டிகள் காணுமல் போய்விட்டனவாம்.

உரும்பராயில் உள்ள மேற்படி தொழிற்சாலையிலிருந்து இவை காணுமல்போய்விட்டதாக சுன்னுகம் பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது.

பூட்டிய கதவு திறக்கப்படாமல், மேற்கூரை எதுவும் பிரிக்கப்படாமல் இத் திருவிளையாடல் நிகழ்ந்துள்ளதாம்.

சுன்னுகம் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஜனுப் இ. ஏ. ஏ. காதர் தீவிர புலன் விசாரணை நடத்துகிருர். (உ)

## அமெரிக்க - ரஷ்ய ஆயுத கட்டுப்பாடு அவசியம்

### மாஜி ஜனுதிபதி போர்ட் வலியுறுத்து

வாஷிங்டன், ஏப். 14

"போராயுதக் கட்டுப்பாடு குறித்து சோவியத் யூனியனுடன் அமெரிக்கா உடன்படிக்கை செய்துகொள்ளுவது அவசர அவசியமாகும். சோவியத் யூனியனுடன் நடைபெறும் ஆயுதக் குறைப்பு பற்றிய பேச்சுவார்த்தைகளில் கார்ட்டர் நிர்வாகம் மேற்கொள்ளக்கூடிய எந்தவித தவருன கணிப்பீடுகளும் இருநாடுகளுக்குமிடையிலான உறவுகளில் பெரும் சிக்கல்களை ஏற்படுத்தும்" என மாஜி அமெரிக்க ஜனுதிபதி ஜெரால்ட்ஃபோர்ட் கூறியுள்ளார்.

மிச்சிகன் பல்கலைக் கழகத்தில் உரையாற்றுகையிலேயே ஃபோர்ட் மேற்கண்டவாறு கூறினுர்

மனித உரிமைகள் பற்றி கார்ட்டர் நிர்வாகம் நடாத்தி வரும் இயக்கத்தைக் கண்டித்தபோர்ட் இரு சோவியத் யூனியனுடன் நடாத்தப்பட்டுவரும் பேச்சுவார்த்தைகளைப் பாதிக்கும் என்று கூறினுர்.

"மத்திய ஐரோப்பாவில் துருப்புக்களைக் குறைப்பது, போராயுதக் கட்டுப்பாடு ஆகியன சோவியத்யூனியனுடனை அமெரிக்காவின உறவுகளை நிர்ணயிக்கும் முக்கியமான காரணிகளாக இருக்கின்றன. இப்பிரச்னைகளுக்கு தீர்வுகாணும் மார்க்கத்தில் முட்டுக்கட்டையிடும் வெள்ளை மாளிகையின் தந்திரோபாயங்களை யாவரும் கண்டித்தாகவேண்டும்" என போர்ட் கூறினுர். (ஆ)

## திருமலையில் பிரார்த்தனை

திருகோணமலை, வியா.

மூதறிஞர் செல்வநாயகத்தின் நலம்வேண்டி திருமலையில் உள்ள பல ஆலயங்களிலும் விசேட பூஜைகளும், பிரார்த்தனை, பஜனைகளும் இடம்பெற்றன. (உ)

# கூட்டணியில் சேராத தமிழர்கள் எல்லோரும் தமிழ் விரோதிகளல்லர்!

## அவர்களையும் சேர்க்க முயலவேண்டும்

— சபா. சண்முகநாதன் —

தமிழர் கூட்டணி என்பது ஒரு சிலரின் தனிப்பட்ட ஸ்தாபனமாக மட்டும் இருக்கக் கூடாது. தமிழ்க்காங்கிரஸ் கட்சியும் தமிழரசுக் கட்சியினரும் சேர்ந்து கூட்டணி என்று அறிக்கை விடுவதும் கூட்டங்களில் மாற்றுக் கட்சியினரையும் தாக்கிப் பேசுவதன் மூலம் இனத்தின் விடுதலையை பெற்றுவிடமுடியாது. தமிழர்கூட்டணி என்ற பெயரில் எல்லா தமிழ் இயக்கங்களையும் சேர்த்தியங்க வேண்டும். அதை விடுத்து பாராளுமன்ற பிரதிநிதியாவதற்கு மக்களை ஏமாற்ருமல் தமிழ்மக்களின் அன்ருட வாழ்க்கைப் பிரச்னையைத் தீர்த்து கிராமம் கிராமமாக சென்று அரசாங்கத்துக்கு வழக்குகள் மூலமும் குற்றச் செயல்கள் போன்றவற்றின் மூலமும் சேரும் வருவாயை நிற்பாட்ட முயற்சிக்கவேண்டும்.

தமிழ் மக்களை பொலிஸ், இராணுவம் அரசாங்க ஊழியரும் ஆகச் சேர்ந்து பலவிதமாகத் தாக்குகிருர்கள். பொலிஸ்பகுதியை எடுத்துக் கொண்டால் தமிழாராய்ச்சி மாநாடு; கோவிலுக்குச் சென்றவரை செம்மணியில் சுட்டது; புத்தளம் துப்பாக்கிச் சூடு; சந்தேகத்தில் கைது செய்தவர்களை பொலிஸ்நிலையத்தில் வைத்து தாக்குவது; வவனியா கடைவீதி வர்த்தகர்களை தாக்கியது; மாசி மாதம் 9-ம் திகதி அரியாலையை வசிப்பிடமாகக்கொண்ட ஒரு தொழிலாளியை மரத்தில் கட்டி வைத்து தாக்கியது; இராணுவத்தினர் சிவில்உடையில் வந்து தாக்கியது போன்ற சம்பவங்களை கவனத்தில் கொள்ளல்வேண்டும்.

உதாரணமாக ஒரு தமிழ் மகன் உதவிஅரசாங்க அதிபரிடமோ கிராமசேவையாளரிடமோ சென்று ஒரு கூப்பன் பதிவுசெய்வதற்கோ அல்லது ஒரு பெர்மிட் எடுப்பதற்கோ சென்ருல் அது ஒரு தினத்தில் முடியாது. வைகள் எல்லாம் தமிழ்ப்பகுதிகளில்தான் இப்படி இருக்கிறது. அரசாங்கத்தில் ஊழியம் செய்பவருக்கு ஒரு கௌரவம். தனியாருக்கு இரண்டாந்தர கௌரவம். இப்படியான செயல்களால் தான் ஒவ்வொருவரும்தான் அரசாங்கத்தில் சேவைசெய்ய விரும்புகிருர்கள். இதனுல் விரும்பியோ விரும்பாமலோ சிங்களமொழியை கட்டாய பாடமாக படிக்கிருர்கள் (இரகசியமாக). வெளியில் மேடையில் சிங்களம் படியாதே என்கிருர்கள். தமிழ்அரசியல் கட்சிகளில் இருந்து வெளியேறி சிங்கள அரசியல்கட்சியில் சேர்ந்தவர்கள் எல்லாரும்

சில தமிழ் பாராளுமன்ற பிரதிநிதிகளின் நடவடிக்கைகளால் அப்படிச் செய்தார்கள். இன்று கூட்டணிக்குள்ளும் இந்த வேலை நடந்துவருகிறது.

### தேர்தல் காலங்களில்...

தேர்தல்காலங்களில் அரசியலை பேயாட்டம் ஆட்டாது. தமிழர்களுக்கு நிரந்தரமாக ஒரு அரசியல்விடுதலைக்கான நடவடிக்கை எடுக்கவேண்டும். கூட்டணியில் அங்கம்வகிக்கும் செல்வந்தர்கள் யாழ்ப்பாணத்தில் தொழிற்சாலைகள் நிறுவாமல், கொழும்பில்தான் நிறுவிவருகிருர்கள் அவர்கள் எல்லாம் தமிழ்ப்பகுதியில் தொழில்ஸ்தாபனங்களை நிறுவவேண்டும். இலங்கையில் ஒரு குடும்பத்தில் பத்துப் பேர் இருந்தால் சராசரி ஐந்து பேர் உழைப்பாளிகளாய் இருக்கிருர்கள். உழைப்புக்கு ஏற்ற வசதிகள் இருக்கின்றன. தமிழ்ப்பகுதிகளில் உழைப்புக்கேற்ற வசதிகள் குறைவு. வடபகுதியைப் பொறுத்த வரையில் பத்துப்பேர்கொண்ட ஒரு குடும்பத்துக்கு ஒருவரே உழைக்கவேண்டி

### விவாதமேடை

இருக்கிறது. மற்றயோர்களுக்கு உழைப்புக்கு வழியில்லை. இதனுல் காலத்துக்குக்காலம் வரும் அரசியல்வாதிகளின்வலையில் மக்கள் தவருகச் சிக்கிவிடுகிருர்கள். தமிழ்ப்பகுதிகளில் மக்களுக்குள் கருத்துவேறுபாடுகள், தர்க்கங்கள், சண்டைகள, எல்லைப்பிரச்னைகள் ஏற்பட்டால் பொலிஸ் நிலையம் போவதைநிறுத்திஇணக்கசபை மூலம்சமாதானங்களை ஏற்படுத்தி அரசாங்கத்துக்குப்போகிற வருவாயை நிறுத்தவேண்டும். இதன்மூலம் எமதுநாட்டுக்குள் பொலிஸ் ஊழியரை வரவிடாது ஓரளவு தடுக்கலாம். மனிதசமுதாயம் பிழைகளை விடுவது இயற்கை அதனைத் திருத்தி நடத்துவதே மனிதப் பண்பு.

### சுந்தரரைச் சேர்க்கவேண்டும்

திரு. சி. சுந்தரலிங்கம் எத்தனையோ நல்ல காரியங்களைத் தமிழ் இனத்துக்காகச் செய்திருக்கிருர். அத்துடன் சில தவருன காரியங்களையும் செய்திருக்கிருர். அவரையும் எங்களின் தமிழர்களின் நல்வாழ்வுக்காக பரம்பேசாது கூட்டணியில் அவரையும் சேர்த்து அவரைப்போன்று கூட்டணியில் சேராது இருப்பவர்களையும் சேர்த்து தேர்தலை மட்டும் நோக்கமாகக் கொள்ளாமல் தமிழ்ச்சமுதாயம் பொருளாதாரத்தாலும் கலாச்சாரத்தாலும் ஒவ்வொருவரும் நன்ருக வாழ சர்வோதய அடிப்படையில் ஒற்றுமையை ஏற்படுத்திருல்தான் அது உண்மையான தமிழர் கூட்டணியாக அமையும். அப்படியான ஒரு நல்ல வழியைத்தான் ஒவ்வொருதமிழர்களும் விரும்புவார்கள்.

அரசியலில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நோக்கத்தைக் கொண்டுஇருக்கலாம். அதற்காக தமிழர் கூட்டணியில் சேராமல் இருக்கும் தமிழர்கள் எல்லாம் தமிழ் விரோதிகள் அல்ல. நம்பநட, நம்பிநடவாதே என்பதற்கேற்ப அரசியலில் இராசதந்திர உபாயத்தைக் கையாளவேண்டும்.

### மாப்பாண முதலியார்

இலங்கையில் போர்த்துக்கேயர் டச்சுக்காரர் காலத்தில் சைவக்கோயில்கள் இடிக்கப்பட்டது. அந்தக் காலத்தில் நல்லூர் கந்தசாமிகோயிலையும் அதன் ஒருபகுதிக்காணியையும் வாங்கிய இருப்பர் டொன்ஜுவான் மாப்பாண முதலியார் தமது பதவிக்காக பெயரளவில் கிறிஸ்தவராக இருந்தாரே ஒளிய செயலால் உள்ளத்தால் சைவமாகவே இருந்தார். இதன் விபரத்தை 1882 ஆண்டளவில் தயாரிக்கப்பட்ட சைவசமய கோவில்களைப்பதிவு செய்துவைத்திருக்கும்டாப்புன்று கச்சேரியில் உண்டு என திரு. குலசபாநாதன் ஒரு புத்தகத்தில் ஆதாரத்துடன் எழுதியிருக்கிருர்.

இப்படி பல அறிஞர்கள் எழுதிய நூல்களைப் 'படித்துக் கொண்டுபோருல் தற்பொழுது அரசாங்கக்கட்சியில் இருக்கும் ஒருசில நல்லெண்ணம் கொண்டவர்கள் தமிழ்மக்கள். செய்யக்கூடியதை அரசாங்கத்துடன் சேர்ந்து பெறுவதைப் பெறுவோம் என்ற நோக்கத்தோடு சேர்ந்திருந்தால் அவர்களை நாம் எதிரிகளைப் போல் அணுகாமல் நல்ல முறையில் அவர்கள்மூலம் பெரும் சேவைகளைப் பெறலாம். இதற்காக எல்லோரும் மண்டியிடவேண்டிய அவசியமுமில்லை.

அமெரிக்காவில் ஒருகாலத்தில் பதினெட்டு வயதுவந்தவர்கள் எல்லோரும் மூன்றுவருடகாலம் ஏழை பணக்காரன் என்ற பாகுபாடு இன்றி வியட்னும்போருக்குப் போகவேண்டும் என்பது அரசாங்கத்தின் முடிபாக இருந்தது. இதை எதிர்த்தவர்களும் இருந்தார்கள், ஆதரித்தவர்களும் இருந்தார்கள். இப்படியான சூழ்நிலை எமது சமுதாயத்திலும் ஏற்பட்டால் நிலைமை எப்படி இருக்கும் என்பதை முன்கூட்டி ஆராய்ந்து அதற்கு எல்லாம் நடவடிக்கை எடுத்தால் இன்று தமிழ்ப்பகுதிகளில் பொலிஸ் இராணுவம் நிர்வாகிகள் ஆகிய தமிழ்மக்களை அடித்துத் துன்புறுத்தமாட்டார்கள். நாங்கள் மேடைப்பேச்சில் இருப்பதால் எங்களை ஆயுதம்கொண்டு தாக்குகிருர்கள். பதவிகள் பெரிது அல்ல நீதியேபெரிது.

தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணியின் ஒரு சட்டத்தரணி சிலநாட்களுக்கு முன்பு ஓர்அறிக்கை பத்திரிகைமூலம் வெளியிட்டு இருந்தார். அவர் அறிக்கை விட்டது தமிழர்விடுதலைக்கூட்டணிக்கு மாறுபட்டதாய் இருந்தபடியால் அவர் தமிழ்மக்களின் விரோதி என்று எண்ணுவது மிகவும் தவறு. அவர் தமிழ்க்காங்கிரஸ் கட்சியில் மிகவும் ஈடுபாடு உடையவர். அவர் தனது உள்ளத்தில் உள்ளவற்றையும் உண்மையையும்தான் வெளிப்படுத்தியுள்ளார்.

---

# "பாடசாலை கட்டடங்களை அமைக்க அரசு உதவுகிறது"

யாழ்ப்பாணம், வெள்ளி 'உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயம் தனது வைர விழாவைக் கொண்டாடுவதன்மூலம் தனது பழமையையும் பெருமையையும் எடுத்துக் காட்டியுள்ளது. அரசாங்கம் பன்முகப்படுத்தப்பட்ட செலவினம்மூலம் பாடசாலைக்கட்டிடங்கள் அமைத்தல் போன்ற முன்னேற்ற விஷயங்களுக்கு உதவுகிறது. இவ்வித்தியாலயத்தில் கல்விகற்கும் மாணவர் முன்னேற்றம் கருதி விஞ்ஞான கூடத்தை அமைத்திருப்பது மிகவும் வரவேற்கக்கூடியது.'

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் வைரவிழா நிகழ்ச்சியில் ஓர் அம்சமாக விஞ்ஞானகூடத்தைத் திறந்து வைத்துப்பேசிய வலிகிழக்கு அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு. வி. அரியநாயகம் தலைமையில் ஆரம்பமான இவ்விழாவில் கற்பகவிநாயகர் ஆலயத்தில் விசேடபூசை நிகழ்ந்ததை யடுத்து விஞ்ஞான விஸ்தரிப்புக்கான கட்டட அடிக்கல்லைத் திரு. தம்பு குமாரசாமி நாட்டினுர். உரும்பராய் வலொமு பட்டினசபைத்தலைவர் திரு. சி. செல்வதுரை ஒன்றிணைந்த பாடத்தை விளக்கும்வகையில் அமைந்த பொருட்காட்சியைத் திறந்துவைத்தார்.

மாலை நிகழ்ச்சியை ஆரம்பித்துவைத்துப் பேசிய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபர் திரு. பொ. சு. குமாரசுவாமி கூறியதாவது: இலங்கையில் சைவத்தமிழ் விருத்தியின்பொருட்டு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் யாழ். இந்துக்கல்லூரியும் ஒன்ருகும். இக்கல்லூரியின் இணைப்பாடசாலைகளில் ஒன்ருன உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயம் சிறியநிலையில் இருந்து வளர்ந்து வந்தது. இன்று வைரவிழாவை எய்தி இருப்பது பெருமகிழ்ச்சியைத் தருகின்றது.

தொழில்நுட்பக்கல்லூரி விரிவுரையாளர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் பேசுகையில் கூறியதாவது: இன்றைய கல்விஉலகில் மாணவர்பங்கு மிகவும் முக்கியமானது அவர்களது வளர்ச்சியே சமுதாயத்தின் வளர்ச்சி. பெருமை வாய்ந்த உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் குழந்தைகள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுவார்கள் என்பது நிச்சயம்.

ஆசிரியர் திரு. க. பாலசுப்பிரமணியம்,பெற்ருர் ஆசிரியர் சங்க உபதலைவர் பண்டிதர் இ. நவரத்தினக்குருக்கள் ஆகியோரும் உரைநிகழ்த்தியதை யடுத்து மாணவர் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (க)

---

### அஞ்சலிக் கூட்டம்

கல்வியங்காடு, வியாழன் சித்த ஆயுர்வேத வைத்தியரும், பண்டிதருமான சங்கரப்பிள்ளை, ராமச்சந்திரன், (வெள்ளையண்ணை) மறைவு குறித்து அஞ்சலிக் கூட்டம் ஒன்று எதிர் வரும் சனிக்கிழமை கவிஞர் வ. திருச்செல்வம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டம் நல்லூர் சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் வீதியில் உள்ள சனசமூக நிலையக் கட்டிடத்தில் இடம் பெறும். (உ)

### நீர்வைக்கந்தன் உற்சவம்

யாழ்ப்பாணம், வெள்ளி நீர்வேலிக்கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இன்று பகல் 1 மணிக்கு கொடியேற்றத்துடன்ஆரம்பமாகிறது தொடர்ந்து 20 நாட்கள் உற்சவம் நிகழும். அடுத்த மாதம் 2 ம் திகதி தேர்த்திருவிழாவும் 3 ம், 4 ம், திகதிகளில் தீர்த்தத் திருவிழாவும் பூங்காவனத்திருவிழாவும் நடைபெறும். (அ)

---

# தமிழினத்தைக் கலப்பு என்றவரா அபிலாஷைகளை நிறைவேற்றுவார்?

அன்பார்ந்த இராஜசிங்கத்திற்கு,

8-4-77ந் திகதிய 'ஈழநாடு' இதழில் கோபிரமணு, விக்னேஸ்வரமூர்த்தி என்ற இரு இளைஞர்களினதும் கடிதத்தைக் கண்டபின்பாவது தமிழ் இளைஞர்கள் இன்னும் விழிப்பாகத்தான் இருக்கிருர்கள் என்பதை உணர்ந்திருப்பீர்களென நம்புகிறேன்.

காசி - சுந்தரருக்கிடையே தோன்றிய வாதத்தினிடையே தாங்கள் குறுக்கிடு செய்து இளைஞர்களின் வழியில் தலையிடாதீர்கள் என்று சுந்தரருக்கு விடுத்த வேண்டுகோளைத்தான் இந்த இரு இளைஞர்களும் தங்களுக்கு விடுத்ததைக் கண்டு மகிழ்வுற்றேன். சுந்தரர் அவர்கள் செல்வாவின் தலைமையை ஏற்காத போதும் தனிநாடு ஒன்று அவசியம் என்பதை இன்ருவது உணர்ந்துள்ளார். ஆனல் நீங்கள் எந்த ஒரு மேடையிலாவது தனிநாடு அவசியம் என்று கூறியிருக்கிறீர்களா?

தாங்கள் 4 4-77ல் 'திருவாதவூரானுக்கு' அளித்த பதிலில் குமாரசூரியரின் சுதந்திரக்கட்சியில் தமிழரின் அபிலாஷைகள் நிறைவேறும் என்று கூறியிருக்கிறீர்கள், தமிழினம் கலப்பு இனம் என்று கூறிய திரு. குமாரசூரியரின் தலைமையிலான சுதந்திரக்கட்சியில் தமிழர்அபிலாஷைகள் நிறைவேறும்என்று இனியும் ஏமாறத் தமிழர்கள் தயாராயில்லை. திரு. குமாரசூரியருக்கு இனித் தமிழினத்திடம் மன்னிப்பே இல்லைஎன்பதைத் தாங்கள் அறியவில்லையா? தனிநாடு கேட்டுப் போராடிச் சிறையில் அடைக்கப்பட்ட இளைஞர்கள் அணிசேரா நாடுகள் மகாநாடு நடைபெறும்போது சாகும்வரை உண்ணவிரதப் போராட்டம் ஆரம்பித்து உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கையில் அவர்களை விடுதலைசெய்யும்படி ஒரு வார்த்தையாவது அரசாங்கத்திடம் கூருது மகாநாட்டின் மகிழ்ச்சியிலே திளைத்திருந்த திரு. குமாரசூரியரா எமது அபிலாஷையை நிறைவேற்றித் தரப்போகிருர்? அது மட்டுமல்ல ஈழத்தமிழகத்திலே எத்தனையோ தமிழ் உயிர்கள் பலிகொள்ளப்பட்ட வேளையிலே அதனைப்பற்றிச்சிந்தியாதிருந்த திரு. குமாரசூரியரின் தலைமையிலான சுதந்திரக்கட்சியாலா அபிலாஷை நிறைவேற்றப்படப்போகிறது?

எமது அபிலாஷை எல்லாம் ஒன்றேஒன்றுதான் என்பதைக் கூறவிரும்புகிறேன். அதாவது எமக்குரிய தமிழ் ஈழத்தை மீட்டுப்பெறுவதே எமது அபிலாஷையாகும்.

அகில உலகமுமே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கொடுமைத் தனத்தை அறிந்தபின்பு ஈழத்தில்வாழும் தமிழ் இனத்திடையே சுதந்திரக்கட்சியையும் திரு. குமாரசூரியரையும் பூசி மெழுகிக் காட்டப்புறப்பட்டிருக்கும் தங்களுக்கு எதிர் வரும் தேர்தலின்போது தக்க பாடம் கிடைக்கும்.

முன்னதாகவே தமிழ் இளைஞர்களுடன் சேர்ந்து இனியாவது தமிழ்ஈழம் காணப் போராட வருக. அதுமுடியாவிட்டால் வீணுக, உதடுகளை, அசைத்துத் தங்களைத் தாங்களாகவே காட்டிக்கொடுக்காதிருங்கள்.

த. சொர்ணலிங்கம்.



டாக்டர் சி. கணேசையா தம்பதிகளின் புதல்வியும் செல்வி சாந்தா பொன்னுத்துரை அவர்களின் மாணவியுமான செல்வி தாரிணி கணேசையாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று வெள்ளிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நிகழவிருக்கிறது.

# வடக்கு, கிழக்குப் பகுதிகளை தமிழர் பாதுகாக்கவேண்டும்

## மூளாயில் 'அமிர்' உரை

சுழிபுரம், வியாழன்

'தேர்தலைப்பற்றி சிந்திப்பவன் அரசியல் வாதி. அடுத்த சந்ததியைப்பற்றி சிந்திப்பவன் அரசியல் ஞானி. தான் ஓர் அரசியல் ஞானியாக இல்லாவிட்டாலும், ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்கள் தமக்கென ஒரு தாயகத்தைக் கொண்டு இந்நாட்டில் வாழவேண்டும் என்பதை கடந்த கால சம்பவங்களைக் கொண்டு உணர்கிறேன்''.

மூளாயில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கிளை அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

மூளாய் முருகமூர்த்தி கோவிலுக்கு முன்பாக நடந்த கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:

'ஈழம்வாழ் தமிழ்பேசும் மக்கள் தங்கள் தாயகமான வடகிழக்குப் பிரதேசங்களை காக்கும் பணியில் ஈடுபடவேண்டும். தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெறுவதிலும்தோல்வியடைவதிலும் பார்க்க நாம் கொண்ட இலட்சியத்தின்வழி செல்வதே சாலவும் பொருத்தமாகும், 1619ம் ஆண்டுக்கு முன்னர் தமிழர் எவ்வாறு இங்கு வாழ்ந்தார்கள் என்பதை தெரிந்துகொள்ள வேண்டும். அந்த நிலையை நாம் மீண்டும் அடைய வேண்டும்.

'நாம் தேர்தல் நெருங்கிவரும்போது மட்டும் மக்கள் முன் வருபவர்கள் அல்ல நாம் கொண்ட இலட்சியத்தை அடைய மக்களுக்குக்கூற சந்தர்ப்பம், காலம் வாய்க்கும் போது எல்லாம் ஆங்காங்கே செல்கின்றோம். இந்த நாட்டில் நாம் அடிமையாக வாழ்வதிலும் பார்க்க உரிமையுடையவர்களாக வாழும் வழியைக் காண்பதே சிறப்பாகும். திரு. எஸ். கருணாநிதி பேசுகையில் 'அண்ணன் அமிர்தலிங்கம் எங்களுக்கு வாய்த்த ஓர் அரும் தலைவனாகும். இலங்கைத்தமிழர் சரித்திரத்தில் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தால் அவரது அரசியல் வாழ்வு அத்தோடு அஸ்தமித்து விடுகின்றது. ஆனால் எங்கள் அண்ணன் அமிர்தலிங்கம் வாழ்வை எடுத்துக் கொண்டால், இவர் ஒரு தேசியப் பேரவை உறுப்பினராக இருந்த காலத்திலும் பார்க்க தோல்விகண்ட சென்ற ஏழு ஆண்டும் உலகம் போற்றும் ஒரு தலைவராக வாழ்ந்துள்ளார். பட்டிதொட்டி எங்கும் தமிழ் ஈழப் பிரசாரத்தை மேற்கொண்டுள்ளார். ஓய்வு இல்லை; உறக்கம் இல்லை. தம்மையே அழித்து, உழைத்து வருகின்றார். இவர் போன்ற ஒருவர் வேறு பகுதியில் வாழ்ந்தால் அதற்குநிகரென்னஎன்றே கூறமுடியாது. இவரிடமுள்ள திறமையை நாம் பெற்றுக் கொள்ளவேண்டும்.''

செல்வன் த. விக்கினராசா பேசுகையில் ''சென்ற தேர்தலில் வட்டுக்கோட்டைத் தொகுதி மக்கள் விட்ட தவறை மேலும் விடக்கூடாது. சலுகையல்ல முக்கியம், உரிமைதான் மிகவும் முக்கியமாகும். ஆட்சிமன்றப் பிரதிநிதியாக யார் சென்றால் சலுகை கிடைக்கும், உரிமை கிடைக்கும் என்பதுதான் கேள்வியாகும். அரசியல் விவேகமும் பேச்சுச் சாதுரியமும் உடையவர் திரு. அமிர்தலிங்கம் என்பதை மறுக்கமுடியாது. இவரது திறமையை நாம் பெற்றுக்கொள்ளவேண்டும்.''

சட்டத்தரணி வே. யோகேஸ்வரன், மாவை. சேனாதிராசா, த. அழகராசா, திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோருட்பட மற்றும் பலர் பேசினர்

## அப்பலோஸ் வெற்றி

கல்வியங்காடு, வியாழன்

புளுடைமன்ஸ் கோஷ்டியை அப்பலோஸ் கோஷ்டி தோற்கடித்தது.

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் 28வது ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற எறிபந்தாட்டப் போட்டியில் புளுடைமன்ஸ் கோஷ்டியை அப்பலோஸ் கோஷ்டி 19ஓட்டங்களால் வென்றது.

வெற்றியீட்டிய அப்பலோஸ் கோஷ்டியே சுற்றுப் போட்டியின் வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. (உ)

## குருசடித்தீவு அந்தோனியார் திருநாள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பண்ணைவீதியின் வலப்பக்கமாக அமைந்திருக்கும் குருசடித்தீவு புனித அந்தோனியார் திருநாள் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

யாழ். குடாநாட்டின் சகல தீவுகளிலும் நடைபெறும் புனித அந்தோனியார்திருநாட்களில் கடைசியாக நடைபெறும் திருநாள் இதுவாகும். ஈஸ்ரர் ஞாயிறில் இருந்து நாவாந்துறை புனித பரலோக மாதா கோவில் கிறிஸ்தவர்கள் தீவில் முகாமிட்டு திருநாள் தொடர்பான சகல ஒழுங்குகளையும் கவனித்துவருகின்றனர்.

நாவாந்துறையிலிருந்தும், மண்டைதீவுச் சந்தியிலிருந்தும் தீவுவரை இலவச படகுப் போக்குவரத்து வசதியும் தண்ணீர் வசதியும் செய்யப்பட்டுள்ளன.

இன்று மாலை 5-30 மணிக்கு கொடியேற்றமும் தொடர்ந்து செபமாலைப் பிரசங்கம் திருப்பலி ஆராதனையும் நடைபெறும்.

நாளை சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு செபமாலைப் பிரசங்கமும், திருப்பலிப் பூசையும், நற்கருணைப்பவனி ஆராதனையும் நடைபெறும்.

17-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6-30 மணிக்கு செபமாலையும் திருநாட்திருப்பலி பாடற்பூசையும் புனிதரின் திருச்சுருபவனியும் நடைபெறும். ஈற்றில் புனித அந்தோனியாரின் திருச்சுருப ஆசீர்வாதத்துடன் திருநாள் நிறைவுறும்.

திருநாள் ஆராதனை ஒழுங்குகளை நாவாந்துறை மீசாம் பங்குத்தந்தை அருட்திரு. அ. தேவசகாயம் அடிகளார் ஒழுங்குசெய்துள்ளார்கள்.

## எச். என். ஸி. ஈ. பரீட்சைக்கு தனிப்பட்டோர் தோற்றலாம்

கொழும்பு, வியா

தேசியக்கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் (எச். என். ஸி. ஈ.) தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றலாம் என்று கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி பிரேமதாஸ உடகம தெரிவித்தார்.

தேசிய கல்விப் பொது சாதாரண பரீட்சையில் சித்தியடைந்த, சித்தியடையாத மாணவர்களும் தோற்றலாம் என்றும் சாதாரணம் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்கள் தே. க. பொது பரீட்சை எழுதி சித்தியடைந்தால் அவர்களுக்கு உயர்கல்வி பெற வசதியளிக்கப்படும் என்றும் கலாநிதி உடகம கூறினார்.

அடுத்த ஆண்டு மே மாதம் முதன்முதலாக நடைபெறவிருக்கும் தே. க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கான மாதிரிப் பரீட்சை எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறும். (உ)



நடிகர்கள் நவாலியூர் நா. செல்வத்துரை, எஸ். தர்மலிங்கம், ஆகியோருக்கு டைரக்டர் எஸ். வி. சந்திரனும் ஒளிப்பதிவாளர் எஸ். தெய்வேந்திராவும் காட்சியை விளக்கிக்கொண்டிருக்கின்றனர். ஒலிப்பதிவாளர்: கே. பாலசுப்பிரமணியம். படம்: 'காத்திருப்பேன் உனக்காக'.

## காங்கிரஸ் தோல்வி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் தலைவர் பதவியிலிருந்து வெளியேறுமாறு பரூவாவுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ள இவ்வேளையில் இவரே இக்கூட்டத்துக்கு தலைமைவகிக்க முன்வந்ததும் ஒருவகையில் பிரச்னையாக இருந்தது. இக்கூட்டத்திலும் இவரது வெளியேற்றத்தை வற்புறுத்திப் பலர் கோரிக்கை விடுத்தனர். (ஆ)

## ஜவுளி விநியோகத்தில் காலக்கெடு இல்லை

### சலுசல அதிகாரி அறிவிப்பு

கொழும்பு, வியா

கூப்பன் புள்ளிகளுக்கான உள்நாட்டு, வெளிநாட்டு ஜவுளிகள் புத்தாண்டின் பின்னரும் தொடர்ந்து பாவனையாளர்களுக்கு வழங்கப்படும்.

இந்நாட்டில் இருக்கும் பாவனையாளர்கள் அத்தனைபேருக்கும் விநியோகிப்பதற்கு வேண்டிய ஜவுளிகள் சலுசல நிறுவனத்திடம்கையிருப்பில்உள்ளதால் ஜவுளிகளுக்கான கூப்பன் புள்ளிகளுக்கும் ஜவுளிகள் வழங்கப்பட்டிருக்குமென அலுவலக நிறுவனத்தலைவர் திரு. பி. ரி. டக்ளஸ் பெரேரா தெரிவித்தார்.

கூப்பன் ஜவுளி விநியோகத்துக்கு எத்தகைய காலக்கெடுவும் விதிக்கப்படவில்லை என்றும் அவர் சொன்னார். (உ)

## புற்றுநோய் பற்றி விளக்கும் திரைப்படம்

கொழும்பு, வியாழன்

புற்றுநோய் பற்றித் திரைப்படம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

புற்றுநோய் ஒழிப்பில் கடந்த பல்லாண்டுகளாக சேவையாற்றிவரும் இலங்கை புற்றுநோய்த் தடுப்புச் சங்கம் புற்றுநோய் பற்றி விளக்கும் இத்திரைப்படத்தைத் தயாரித்துள்ளது.

இத்திரைப்படம் தயாரிப்பதற்கான நிதியுதவியை வெள்ளவத்தை லயன்ஸ் கழகம் அளித்துள்ளது.

வெற்றிலை போடுவதில் ஏற்படும் கெடுதலை விளக்குவதாக இப்படம் அமைந்துள்ளது எனத் தெரியவருகிறது.

''புகைத்தலும் புற்றுநோயும்'' பற்றிய படமொன்றைப் பெறுவது பற்றியும் திரைப்படக் கூட்டுத்தாபனத்துடன் சங்கம் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளது.

இப்படம் திரையிடப்படுவதன் மூலம் புற்றுநோய் பற்றிய அறிவை மக்கள் மத்தியில் பரப்பவும், நோயின் கொடூரத் தன்மை பற்றி மக்கள் விழிப்பாக இருக்கச் செய்யவும் சங்கம் முடிவு செய்துள்ளது. (உ)

## மதுபோதையுடன் கள்ளுச் சீவமுயன்றவர் பரிதாப பலி

யாழ்ப்பாணம், புதன்

மிதமிஞ்சிய மதுபோதையில் கள்ளுச் சீவுவதற்குத் தென்னை ஏறிய சீவல் தொழிலாளி ஒருவர் தென்னையிலிருந்து தவறி வீழ்ந்து மரணமானார்.

யாழ்ப்பாணத்தில் இச்சம்பவம் நடந்தது. எஸ். ஆறுமுகம் அல்லது அருளானந்தம் (வயது 66) என்ற இத்தொழிலாளியின் மரணம் குறித்து திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் விசாரணை நடத்தினார்.

சம்பவ தினத்தன்று மிதமிஞ்சிய மதுபோதையில் கள்ளுச் சீவுவதற்கு வந்த பிரஸ்தாப தொழிலாளியை வளவுக்காரர்கள் மதுபோதையுடன் தென்னையில் ஏறவேண்டாம் என்று புத்திமதி கூறினராம்.

அதைப் பொருட்படுத்தாத அவர், தென்னையில் ஏறிய போது தவறி வீழ்ந்து தலையில் அடிபட்டு யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணம் சம்பவித்ததாம்.

விபத்து மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (உ)

## வண்ணை சிவன் கோவிலில்இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இன்றுமாலை 4 45 மணிக்கு பிரதோஷஉற்சவமும் மாலை 5 45 மணிக்கு பிரதோஷ பூசையும் சுவாமி இடப வாகனத்தில் உள்வீதி வலமும் பின் 6 மணி முதல் 7 மணிவரை சமயப்பிரசங்கமும், இரவு 7 30 மணிக்கு சுக்கிரவார அம்பாள் பூசையும் இரவு 8 மணிக்கு அர்த்தசாமப் பூசையும் நிகழும்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன்-நிர்மலா
வீட்டுக்கு வந்த மருமகள்

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி - ஜெயலலிதா
அன்பைத்தேடி

RIO (Jaffna) Daily 4 Shows
RAVAGERS

ராணி [யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - வைஜந்திமாலா
நம்பியார் - வசந்தி நடித்த
தேன் நிலவு

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
ஃ சிவாஜி (இருவேடம்)
ஃ ஜெயலலிதா ஃ சுந்தரராஜன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
பாட்டும் பரதமும்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் இப்பொழுது நடைபெறுகிறது
(யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
M. G. ராமச்சந்திரன, பானுமதி
நடித்த
மதுரைவீரன்
(புத்தம் புதிய கொப்பி)

வெலிங்டன் ஃ முத்துராமன் ஃ சுஜாதா
[யாழ். நகர்] நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 சிவாஜி, கே. ஆர். விஜயா
[யாழ். நகர்] பத்மினி நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
இருமலர்கள்
(புதியபிரதி)

REGAL (JAFFNA) Daily at 4-45, 7-00 & 9-30 p m. only
SIMON WARD in
All Creatures Great & Small
(Color)

From 18-4-77
"CIRCUS"
(A Full Length Circus Film) (Color)

11-வது வெற்றி வாரம்!
மனோகரா (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

ராஜா (யாழ். நகர்)
ஜெமினி - சரோஜாதேவி
நாகேஷ் - விஜயநிர்மலா
டி. கே. பகவதி
தினசரி 4 காட்சிகள் நடித்த
பணமா பாசமா
(புத்தம் புதிய பிரதி)

# விவசாயிகள் சந்தேகங்களை கருத்தரங்கு தீர்க்கும்'

நல்லூர், வியாழன்

இக்கருத்தரங்கு விவசாயிகளின் சந்தேகங்களைத் தீர்ப்பதற்கும், விவசாய அறிவை வளர்ப்பதற்கும் சிறந்த பலாபலனைக் கொடுக்கும்.

த ரோரு லிமிட்டெட் ஸ்தாபன ஆதரவில் உடுவில் விவசாய பெருக்கக் குழு மண்டபத்தில் நடந்த கருத்தரங்கில் உடுவில் விவசாய பெருக்கக்குழு உபதலைவர் திரு. எஸ். செல்வரத்தினம் தலைமை தாங்கிப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

விவசாயிகள் தங்கள் பயிர்களில் உள்ள நோய்களை உடனுக்குடன் கண்டு அதற்கேற்ற தகுந்த கிருமிநாசினிகளையும் பங்கசு நாசினிகளையும் விசுறுவதன்மூலம் நோய்களைக் கட்டுப்படுத்தி உற்பத்தியை பெருக்கலாம். உற்பத்தி பெருகினுல் நம்நாட்டின் தேசியவருமானம் அதிகரிக்கும். அதனுல் நம் வாழ்வு வழம்பெறும். விவசாயிகளின் நலன்கருதி த ரோரு லிமிட்டெட் ஸ்தாபனத்தார் ஆற்றிவரும் விவசாய சேவையை நாம் வெகுவாகப் பாராட்டுகின்றோம்.''

கொழும்பி சி. ஐ. எஸ். லிமிட்டெட் சந்தைப்படுத்தும் முகாமையாளரான திரு. இ. இரத்தினம் பேசும்போது தற்போது விவசாய பயிர்களை தாக்கும் கொப்பழுகல் நோய் இலை அழுகல் நோய் போன்றவற்றைக் கட்டுப்படுத்த தற்போது நடைமுறையிலுள்ள "மஸ்கோ செப்'' காபமேற் பங்கசு நாசினியை பாவிப்பதே சிறந்தது. விவசாயிகள் மஸ்கோ செப்பை பாவித்து அதன் விசேட தன்மையை இலகுவாக அறிந்துகொள்ளலாம் எனத் தெரிவித்தார்.

விவசாய போதனுசிரியரான திரு. குகநாதன் தமது உரையில் விவசாயப் பயிர்களுக்கு விவசாயிகள் ஒரேநேரத்தில், ஒரேமுறையில் சிபார்சு செய்ய இரசாயன மருந்துகளை பாவித்தால் ஓரளவு பூச்சிபுழுக்களிலிருந்தும் நோய்களிலிருந்தும் விவசாய செடியைத் தப்பித்துக்கொள்ளலாம்'' எனத் தெரிவித்தார்.

ரோரு ஸ்தாபன விவசாய ஆலோசகர் "தற்போது கமங்களில் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் பூச்சி, புழுத் தாக்கங்கள் பற்றியும் பங்கசு தாக்கங்களை பற்றியும் அவற்றை இலகுவான முறையில் மாற்றக் கூடிய முறையில் விரிவாக எடுத்துக்கூறினர். தொடர்ந்து அவர் கூறியதாவது;

இரசாயன கிருமிநாசினி உபயோகிக்கும் முறை, ஒரு நோய் ஏற்பட்டால் அந்த நோயைத் தடுப்பதற்கு ஒரே இரசாயன மருந்தை மாத்திரம் பாவித்தல்வேண்டும். வேருெரு கிருமிநாசினியுடன் இன்னொரு கிருமிநாசினியைக் கலந்து விசுறுதலை விவசாயிகள் தவிர்த்தல் வேண்டும். ஒவ்வொரு விவசாய கிருமிநாசினிகளையும் அதற்கேற்ற விகிதத்தில் கலந்தே விசுறுதல் வேண்டும்.

விவசாயப் பயிர்கள் வாடல்நோயினுல் கண்டுகள் தாக்கும்போது தாக்கப்பட்ட கண்டுகளை கமத்தில் தலைகீழாக தூக்காமல் அக்கண்டுகளை எரித்துவிட்டு கப்டான் அல்லது ஒரு பங்கசு நாசினியை ஒரு அவுன்ஸ் ஒரு கலன் தண்ணீரில் கலந்து அடிக் கண்டிற்கு ஊற்றி இந்நோயைத் தடை செய்யலாம். வாடல் நோயை தடைசெய்வதற்கு சுழற்சி முறை பயிர்ச்செய்கையை மேற்கொள்ளவேண்டும்'' என கூறினர். (க)

## மாநிலமுதல் மந்திரிக்கு கோர்ட் உத்தரவு

திருவனந்தபுரம், ஏப்ரல். 14

கடந்தவருடம் மார்ச் மாதமளவில் சிறைவைக்கப்பட்டுள்ள மாணவரான ராஜன் என்பவரை கோர்ட்டில் ஆஜர் செய்யுமாறு கேரள முதல் மந்திரி திரு. கருணுகரனுக்கும் மற்றும் மூன்று பொலிஸ் இன்ஸ்பெக்டர்களுக்கும் உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (அ)

......

## ரஸிக ரஞ்சன சபா இசைவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். ரஸிகரஞ்சன சபாவின் இசைவிழா பின்போடப்பட்டுள்ளது.

இவ்விழா இன்று தொடக்கம் பத்துநாட்கள்வரை நடைபெறவிருந்தது. (உ)

## மின்சார விநியோகம்

திருகோணமலை, வியா.

பன்முகப் படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின்கீழ் திருமலைக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் இம்முறை திருமலை எம். பி. திரு. பி. நேமிநாதன் மேற்கொண்ட முயற்சியினுல் சாம்பல்தீவு, நிலாவெளி ஆகிய இரு கிராமங்களுக்கும் மின்சார விநியோகம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. (உ

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
பணக்காரக் குடும்பம்

குடும்பஸ்தர்

## கத்திரிக்கோலினுல் குத்திக் கொலை

காலி, வியாழன்

மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் கத்திரிக்கோலினுல் குத்திக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் காலியில் நடைபெற்றது.

பிரேமசிறி என்பவரேகொலை செய்யப்பட்டவராவர்.

சம்பவதினம் கொலைசெய்யப்பட்ட பிரேமசிறி தையற்கடை ஒன்றிற்குச் சென்று அதன் உரிமையாளரிடம் ஷேர்ட் ஒன்றைக் கப்பமாகத் தரும்படி கேட்டாராம். அவருடன் இன்னும் ஒருவரும்சென்றிருந்தார்.

ஆனுல் கடை உரிமையாளர் கப்பமாகத் தரமுடியாதென்று மறுத்துவிட்டார்.

இதனையடுத்து கடைஉரிமையாளர் தனது கடையிலிருந்த கத்தரிக்கோலினுலும், கத்தியாலும் இருவரையும் குத்தினுராம்.

இத் தாக்குதலில் பிரேமசிறி மரணமானுர். மற்றவர்படுகாயங்களுடன் காலி ஆஸ்பத்திரிக்கு விரையப்பட்டார்.

தையற்கடைக்காரர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். (உ)

## மாமன் - மருமகன் மோதல் படுகொலையில் முடிந்தது

யாழ்ப்பாணம், வெள்ளி

மாமனுக்கும் மருமகனுக்கும் இடையில் நடந்த மோதலில் மருமகன் மரணமான சம்பவம் ஒன்று நீர்வேலி-அச்செழுவில் நடைபெற்றுள்ளது.

கந்தையா சிவநேசன் (வயது 28) என்பவரே மரணமானவராவார்

சம்பவ தினத்தன்று நடி போதையில் காலஞ்சென்றவர் மாமனைத் தாக்கியதாகவும் இதனையடுத்து மாமன் விறகு கட்டையால் காலஞ்சென்றவரைத் தாக்கியதாகவும் யாழ். பெரியாஸ்பத்திரிக்கு விரையப்பட்டும் உயிரைக் காப்பாற்ற முடியவில்லையென்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபரான ஏ. நமசிவாயம் என்பவரைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

கோப்பாய் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஜனப் ரி. பி. ஷரப் தொடர்ந்து விசாரணை நடத்துகிருர். (உ)

## மேலைப்புலோலியில் நாளை சதாவதானம் நினைவு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் 70-வது நினைவு விழாவை நாளை சனிக்கிழமை மாலை புலோலியில் கொண்டாடப்படவிருக்கிறது. புலோலி மேற்கில் கதிரைவேற்பிள்ளை சனசமூகநிலைய முன்றலில் நிலையத்தலைவர் திரு. சி. நந்தகோபால் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் சட்டத்தரணி மு. சோமசுந்தரம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

இவ்விழாவில் அமரர்கள்பண்டிதை தங்கம்மா கணபதிப்பிள்ளை, பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை, சு. கதிர்காமத்தம்பி ஆகியோருக்கு அஞ்சலி செலுத்திப் பல பெரியார்கள் உரையாற்றுவர்.

சதாவதானி திரு. பசுபதி யோகீஸ்வரன், புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை, திருமதி மனோன்மணி சண்முகதாஸ், திரு. க. சிவராமலிங்கம், யாழ். வளாகத்தைச் சேர்ந்த திருவாளர்கள் ப. கோபாலகிருஷ்ணன், நா. சுப்பிரமணியம் ஆகியோர் உரையாற்றுவர்.

'நாளை நமதே' என்ற கருத்து மேடையில் புதுவை இரத்தினதுரை, நயினை நாக. பஞ்சாட்சரம், திரு. க. இராஜமனோகரன், திரு. நா. தர்மராசா முதலியோர் உரையாற்றுவர்.

முதற்பரிசு பெற்ற பேச்சுக்கள், சதாவதானி கதிரைவேற்பிள்ளை கல்வி நிலையச் சிறுர்களின் அபிநயம் வட இந்து மகளிர்கல்லூரி மாணவிகளின் வயலின் இசை பரிசு வழங்குதல் விழா மலர் வெளியீடு மெல்லிசை முதலிய நிகழ்ச்சிகளும் இடம்பெறும். [அ]

ஈழநாடு

The EELANADU

# இந்தியாவில் முழுப்புரட்சி ஏற்பட வேண்டும்!

## ஜெயப்பிரகாஷ் நாராயண் அறைகூவல்

புதுடில்லி, ஏப் 14

'இந்தியாவில் பூரணமான புரட்சியொன்று ஏற்பட வேண்டும். சுகவீனமுற்று படுக்கையில் இருக்கும் இந்த வேளையிலும்கூட அந்த லட்சியத்துக்காக நான் உழைக்கத் தயாராய் இருக்கிறேன்' என்று சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் கூறினர்.

குஜராத்தில் ஊழலுக்கு எதிராக ஏற்பட்ட மாணவர் புரட்சி நாடு பூராவும் பரவியது. அதன் விளைவு கடந்த தேர்தலின்போது வெளியாயிற்று. இப்புரட்சி பூரண புரட்சியாக மலர வேண்டும் என்று ஜெயப்பிரகாஷ் வலியுறுத்தினர்.

பம்பாய் ஆஸ்பத்திரியொன்றில் சிகிச்சைபெற்றுவரும் திரு. நாராயண் வானொலி மூலம் இந்திய மக்களுக்கு நிகழ்த்திய உரையில் இதைக் கூறினர்.

**சாதிப் பிரச்னை**

பூரண புரட்சியின் ஓர் அங்கமாக சாதிக்கொடுமையைமுற்ருக ஒழித்துவிட வேண்டும் என்று அவர் சொன்னர்.

புத்தபெருமான் காலத்துக்கு முன்பிருந்தே இந்திய சமூகத்தில் சாதிக் கொடுமையை ஒழித்துவிடுவதற்கான முயற்சிகள் நடைபெற்று வந்துள்ளன. ஆனல் சாதிப்பிரச்னை தொடர்ந்தும் வளர்ந்தே வருகின்றது. இது இந்துசமூகத்தின் பெரிய சாபக்கேடாகும். இதனை முற்ருக ஒழிக்க வேண்டும். இத்துடன் பிறப்பு, திருமணம், இறப்பு போன்ற சம்பவங்களின்போது குருட்டுத்தனமான மூடநம்பிக்கைகளும் சம்பிரதாயங்களும் நிலவிவருகின்றன. அவைகளும் இந்துசமூகத்திலிருந்து ஒழிக்கப்பட வேண்டும் என்று திரு. நாராயண் கூறினர்.

**கல்விச் சீர்திருத்தம்**

கல்விச் சீர்திருத்தம்பற்றிக் குறிப்பிட்ட திரு. நாராயண் இந்த விஷயத்தில் நாம் சீனவைப் பின்பற்ற வேண்டும் என்ருர். பாடசாலைகள், கல்லூரிகள் யாவும் மூடப்பட்டு மாணவர்கள் கிராமங்களுக்கும் புறநகரப்பகுதிகளுக்கும் அனுப்பப்பட வேண்டும் என்ருர்.

கூட்டணி

## மேதின ஊர்வலத்தில் அலங்கார ஊர்திகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழ் தொழிற்சங்கக் கூட்டணியைச் சேர்ந்த மொழிவழித் தொழிற் சங்கங்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் இணைந்து யாழ்ப்பாணத்தில் நடாத்தவிருக்கும் மேதின ஊர்வலத்தில் அலங்கார ஊர்திகள் நடைபெற விருக்கின்றன.

தமிழ் மக்களின் தொழில் வளங்களையும் கலை, கலாசாரத்தையும் பிரதிபலிக்கும்வண்ணம், அலங்கார ஊர்திகள் இடம்பெறும்.

மருதனு மடத்தில் மே 1ம் தேதி பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் ஊர்வலம் காங்கேசன்துறை வீதி வழியாக யாழ்ப்பாணம் முற்றவெளிமை தானத்தை வந்தடையும்.

அலங்கார ஊர்திகளை, ஊர்வலத்தில் கலந்து கொள்ள விரும்புவோர் இம்மாமம் 25ம் திகதிக்கு பிந்தாமல் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலகத்தில் மேதின அமைப்புக் குழுத் துணைச் செயலாளர் திரு. சிவ. மகாராசாவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேதினத்தன்றும், அதற்கு முதல் மூன்று நாட்களும்ஒழுங்குகளைக் கவனிப்பதற்கு தொண்டர்கள் தேவைப்படுவதாகவும் விரும்புவோர் உடனடியாக கூட்டணிக் காரியாமலயத்தில் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மே தின அமைப்பு குழுச் செயலாளர் திரு. இ. பேரின்பநாயகம் மேற்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார். (க-அ)

காரைநகரில்

## இன்று ஆரம்பமாகும் விளையாட்டுப் போட்டி

காரைநகர், வெள்ளி

காரைநகர் வாரிவளவு நல்லியக்க சபையினர் வருடந்தோறும் நடாத்தும் புதுவருட விளையாட்டுப் போட்டி இன்று தொடக்கம் 3 தினங்கள் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் முக்கிய நிகழ்ச்சிகளாக 15 மைல் மரதன் ஓட்டம், சைக்கிளோட்டம், நீச்சல் போட்டி என்பன இடம் பெறுகின்றன. இப்போட்டிகளில் வெற்றிபெறும் வீரர்களுக்கான பரிசில்களை காரைநகர் வர்த்தகர்கள் கொடுக்க முன்வந்துள்ளனர். (அ)

## வாலிபரின் நெற்றியைத் துளைத்த துப்பாக்கிக்குண்டு

### திருமலையில் திகில் சம்பவம்

திருகோணமலை, வியாழன்

இருகோஷ்டியினர் மத்தியில் ஏற்பட்டமோதலில் கோவிந்தன் குமார் என்ற வாலிபர் நெற்றியில் சூடுபட்டு பலியானர்.

இத்துப்பாக்கிச் சூட்டில் நந்தகோபால் அன்பழகன் என்ற நபர் காயமடைந்தார்.

இராசையா வடிவேல் என்பவர் இச்சம்பவம்தொடர்பாக சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. இ. சச்சிதானந்தம் விசாரணை நடத்தினர்.

திருமலை பொலிசார் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (உ)

## அன்புவழிபுரம் மின்சாரம் பெறும்

திருக்கோணமலை, வியாழன்

''அன்புவழிபுரத்திற்கு இன்னும் ஒரு மாதத்தில் மின்சாரம் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது'' என்று திருமலை எம். பி. திரு பி. நேமிநாதன் அன்புவழிபுரம் கலைமகள் வித்தியாலயப் புதிய கட்டடத் திறப்புவிழாவில் பேசுகையில் கூறினர்.

கட்டடத்தை திரு. நேமிநாதன் எம். பி. திறந்துவைத்தார். [உ]

## சுவரண்சிங் காங்கிரஸின் தற்காலிகத் தலைவர்

புதுடில்லி, ஏப். 14

இந்திய முன்னள் வெளியுறவு அமைச்சர் திரு. சுவரண்சிங் காங்கிரஸ் கட்சியின் தற்காலிகத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. பருவா தலைவர் பதவியிலிருந்து ராஜிஞமாச் செய்துள்ளதையடுத்து புதிய தலைவர் தெரிவு செய்யப்படும்வரை திரு. சுவரண்சிங் தலைவராகப் பதவி வகிப்பார். (இ)

# யாழ்தேவி மோதி

## வயோதிபர் துடித்துச்சாவு

சாவகச்சேரி, வியாழன்

காதுகேட்கும் சக்தியை இழந்த ஒரு வயோதிபர் புகையிரதப் பாதைஊடாக வரும்போது யாழ்தேவியால் மோதப்பட்டு அந்த இடத்திலேயே துடிதுடித்து மரணமானர்.

இச்சம்பவம் சங்கத்தானையில் நடைபெற்றது.

புங்குடுதீவைச் சேர்ந்த க. சின்னத்துரை (வயது 60) என்பவரே மரணமடைந்தவராவர்.

சாவகச்சேரி சட்டத்தரணியும் மரணவிசாரணை அதிகாரியுமான திரு. வி. பாலகிருஷ்ணன் நடத்திய மரணவிசாரணையில் இவர் ஒரு வியாபாரி என்றும் யாழ்தேவியால் மோதப்பட்டு இறந்தாரென்றும் தெரியவந்தது. பிரேத பரிசோதனை நடைபெற்றது. பொலிஸ் உத்தியோகத்தர் திரு. வி. வேலாயுதம் மரண விசாரணை ஏற்பாடுகளைச் செய்தார் விபத்துமரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

•••

## அறிமுகவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

''வைகறை'' சிறுகதைத் தொகுப்பு நூல் அறிமுகவிழா குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் சபைத் தலைவர் திரு. ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் நாளைசனிக்கிழமை மாலை நடைபெறவிருக்கிறது.

...—

## நல்லூரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னும் முடிவுசெய்யவில்லையென்றும் அங்கிகரிக்கப்பட்டுள்ள தேர்தல் சின்னங்களில் ஒன்றைப்பெறவிருப்பதாகவும் அவர் கூறினர்.

நாளைமறுதினம் காலை ஈழத் தமிழ்த்தொண்டர் சபைக் கமிட்டிக்கூட்டமும் பிற்பகல் தேர்தல் மாநாடும் நடைபெறும் என்றும் அவர் கூட்டினர். (க-அ)

......

## சாதி, சமய....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திக்கமுள்ள குடியரசாகும் என்று கூறிய அவர், தொடர்ந்து பொருளாதாரச் சுபிட்சமடைவதில் நாடு முன்னேறிக் கொண்டிருப்பதாகச் சொன்னர்.

ஏகாதிபத்திய ஆதிக்கத்திலிருந்து இந்நாட்டுக்குச் சொந்தமான நிலத்தை அரசு தம் வசப்படுத்தி, நாட்டு மக்களுக்குப் பகிர்ந்தளித்திருப்பது இந்த அரசின் ஒரு சாதனை. அத்துடன் கடலுக்குள் விரயமாகிக்கொண்டிருந்த மகாவலி நீரைத் திசை திருப்பியதன் மூலம் பெரும்போக நெல் விளைச்சலில் அதிக பயனைப் பெறமுடிந்ததென்றும் பிரதமர் தெரிவித்தார்.

நாம் பெற்ற சுதந்திரத்தைப் பொருளாதார ரீதியிலும் பெற்றுக்கொள்ள இந்நாட்டு மக்கள் பாடுபடவேண்டும். அத்துடன் சமய சமூக இனப் பாகுபாடுகளை மறந்து சகோதரர்களாக அனைவரும் வாழ வேண்டுமென்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

## சுவீப்முடிவுகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 27 B 0571 | 30 B 0513 |
| 29 C 0388 | 23 C 0185 |
| 04 C 0545 | 19 C 0499 |
| 19 D 0502 | 47 E 0773 |
| 49 E 0373 | 33 F 0200 |
| 17 F 0261 | 14 F 0276 |
| 09 F 0225 | 21 F 0799 |
| 39 F 0242 | 32 F 0708 |
| 06 G 0598 | 10 G 0655 |
| 49 G 0105 | 02 G 0077 |
| 05 G 0990 | 05 G 0232 |
| 43 H 0664 | 50 H 0625 |
| 05 J 0288 | 47 J 0385 |
| 39 J 0615 | 16 J 0206 |
| 45 K 0208 | 28 K 0585 |
| 11 L 0292 | 12 L 0418 |
| 47 L 0742 | 18 L 0156 |
| 49 L 0249 | 42 L 0045 |
| 17 M 0294 | 26 M 0767 |
| 11 M 0995 | 09 N 0130 |
| 40 N 0436 | 14 N 0814 |
| 44 O 0091 | 45 O 0799 |
| 32 O 0104 | 19 O 0409 |
| 17 O 0421 | 26 P 0785 |
| 22 P 0270 | 50 P 0775 |
| 10 P 0558 | 49 P 0421 |
| 48 P 0190 | 21 Q 0564 |
| 41 Q 0097 | 11 Q 0938 |
| 22 Q 0009 | 07 Q 0456 |
| 14 Q 0652 | 39 O 0784 |
| 44 R 0918 | 17 R 0968 |
| 04 R 0546 | 36 R 0146 |
| 42 R 0199 | 47 S 0172 |
| 45 S 0025 | 25 S 0254 |
| 01 S 0917 | |
| 09 T 0747 | 17 T 0738 |
| 01 U 0454 | 20 U 0334 |
| 26 U 0715 | 28 U 0814 |
| 36 U 0655 | 08 U 0560 |
| 41 U 0170 | |
| 44 V 0929 | 48 V 0087 |
| 02 W 0895 | |
| 31 X 0454 | 28 X 0397 |
| 47 Y 0950 | 02 Y 0020 |
| 41 Y 0924 | |
| 47 Z 0803 | 18 Z 0676 |
| 35 Z 0562 | 09 Z 0902 |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்) (ம-இ)

......

## தொண்டமான் செய்தி

கொழும்பு, வியாழன்

தமிழ்மக்களுக்கு ஏன் உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்று இதுவரை கருதிவந்த சிங்கள மக்கள் இன்று தமிழ்மக்களுக்கும் பிரச்னைகள் உண்டுதான்; அவர்களது உரிமைகள் வழங்கப்படத்தான் வேண்டும்என்று உணரத் தலைப்பட்டுவிட்டனர். இச்சந்தர்ப்பத்தில் நாம் ஒற்றுமையைப் பாதுகாத்து நமது உரிமைகளைப் பெறவேண்டும்.

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் விடுத்துள்ள புதுவருடச் செய்தியில் தெரிவித்துள்ளார். (ம-இ)

......

## புங்குடுதீவில் இன்று சமயதீட்சை

யாழ்ப்பாணம், வெள்ளி

புங்குடுதீவு கிழக்கு தல்லையபற்று முருகமூர்த்தி கோவிலில் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் சைவசமய தீட்சை வழங்கப்படவிருக்கிறது. புங்குடுதீவு இந்து இளைஞர் சங்கத்தின் ஆதரவில் இது நடைபெறுகிறது.

கரணவாயைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ செ. விசுவநாதக் குருக்கள் இச்சமய தீட்சையினை வழங்குவார். புங்குடுதீவின்பல பகுதிகளையும் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட சைவர்கள் சமய தீட்சைபெற முன்வந்துள்ளனர். (அ)

## சிரமதானத்தில் யாழ். இந்து சாரணர் குழு

கல்வியங்காடு, வியாழன்

கொழும்பில் நடைபெறவிருக்கும் சிரமதானப் பணிகளில் கலந்துகொள்ளும் பொருட்டு யாழ். இந்துக்கல்லூரி சாரணர் குழு இம்மாதம் கொழும்பு செல்கிறது.

இம்மாதம் 16-ம், 17-ம் திகதிகளில் இரத்மலானையிலுள்ள கொழும்பு இந்துக்கல்லூரியில் இடம்பெறும் இச் சிரமதானப் பணியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியுடன் கொழும்பு இந்துக்கல்லூரியும் இணைந்து செயற்படும். (அ)

## வி. அ. நிலைய, வங்கி திறப்பு விழா

திருகோணமலை, வியாழன்

திருகோணமலை குச்சவெளி விவசாய அபிவிருத்தி நிலையத்தைதிருகோணமலை எம்.பி. திரு. பி. நேமிநாதன் திறந்துவைத்தார்.

## யாருடையது?

சண்டிலிப்பாயைச் சேர்ந்த கந்தையா முருகேசு என்பவரின் அடையாளஅட்டை யாழ்ப்பாணம் கே.கே.எஸ்.வீதியில்கண்டெடுக்கப்பட்டு யாழ்.மாநகர சபையைசேர்ந்த எஸ். அமிர்தலிங்கம் என்பவரால் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் பெற்றுக் கொள்ளலாம். (ஆ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu! P. O. Box 49, Jaffna) Telegram: Eelanadu, Telephone 389, Registered as a Newspaper in Sri Lanka.!